பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர் 114 இதழ் 5 15-4-1988 (ஏப்ரல்15-ஏப்ரல்22) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

''அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு. அறுவடைக்கு தேவையான வர்களை மிகுதியாக அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்'' இம் மாதம் 24ஆம்திகதிவெள்ளி விழாக் காணும் தேவ அழைத்தற் தினம், தேவ அழைத்தலை ஊக்குவிக்க நம்மைத் தூண்டட்டும்.

தேவ அழைத்தற் தினத்துக்கான திருத் தந்தையின் செய்தி அடுத்த இதழில்.

### மறைவட்டத்திலுள்ள மரியாளின் திருப்பதிக்கு யாத்திரை செய்து ஞானவாழ்வைப் புதுப்பியுங்கள்

# சமாதானத்துக்காக அனைவரும் செபிக்கவும்

## ஆவணி 15வரை பரிபூரணபலன் பெறவும் அழைப்பு

### — யாழ் ஆயரின் திருமுகம்

''திருத்தந்தையால் அறிவிக்கப்பட்ட மரியாளின் ஆண்டு ஆவணி 15இல் மரியாளின் விண்ணேற்பு விழாவுடன் முடிவடைகிறது. மரியாளின் ஆண்டுக்கென திருத்தந்தை விசேட சலுகைகளை அறிவித்துள்ளார். நமது மறைவட்டத்திலுள்ள விசுவாசிகளும் இறைவனின் அன்னையின் வல்லமை மிக்க அருளைப்பெற்று, வாழ்வைப் புனிதப்படுத்த முயல வேண்டும்'' என யாழ். ஆயர் தம் மறைவட்ட மக்களுக்கு விடுத்துள்ள திருமுகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ் ஆயர் இம்மாதம் வெளியிட்டுள்ள தம் திருமுகத்தில் மரியாளின் ஆண்டின் முக்கியத்துவத்தை இறைமக்களுக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

திருத்தந்தை ''மீட்பரின் அன்னை'' என்னும் பொதுத் திருமுகத்தை வெளியிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, விசுவாசிகள் பங்குக் கோவில்களில் அவைபற்றிய ஆய்வுரைகளையும் கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்யும் படி பணித்துள்ளார். இச் சுற்றுமடல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு விற்பனைக்கு உள்ளது. நமது பத்திரிகையும் தொடர்ச்சியாக அதனை வெளியிட்டு வருகிறது.

''மரியாளின் விழாக்கள் இவ்வாண்டு சிறப்பாகக் கொண்டாடப் படவேண்டும்'' என்ற திருத்தந்தையின் அழைப்பையும் யாழ். ஆயர் வலியுறுத்தியுள்ளார்.

குடும்ப செபமாலை, மரியாளின் திருப்பதிக்கு யாத்திரை என்பனவும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

பரிபூரண பலன்களைப் பெறும் இடங்களும் சந்தர்ப்பங்களும் இத்திருமுகத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

''இவ் விசேட சலுகைகளை நன்கு பயன் படுத்தி மரியாளின் ஆண்டின் போது நமக்கும் உத்தரிப்புத் தலத்தில் உள்ள ஆன்மாக்களுக்கும் பரிபூரண பலன்களை அடைவோமாக'' என்ற ஆயர் மே மாதம் இதற்கு விசேடமானது என்றும் இம்மன்றாட்டில் ''சிறப்பாக நம் நாட்டில் சமாதானம் உருவாக, சமாதானத்தின் இராக்கினியிடம் வேண்டுவார்களாக'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## இளவாலை மறைவட்டத்தினர் முன்னணியில்

பொது நிலையினரதும், குடும்பத்தினதும் யாழ் மறை வட்ட ஆணைக்குழுவினரால், பொது நிலையினர் ஆண்டை முன்னிட்டுப் பாதுகாவலன் அநுசரணையுடன் நடாத்தப் பெற்ற, பொது நிலையினர் பற்றிய கட்டுரைப் போட்டியில் இளவாலை மறை வட்டாரத்தைச் சேர்ந்த நால்வரின் கட்டுரைகள் பரிசுக்குரியனவாய் தெரிவு செய்யப்பட்டு இளவாலை மறை வட்டாரத்தினர் முன்னிலையில் திகழ்கின்றனர்.

1. க. பொ. த. சாதாரண தர மாணவர் பகுதியில், முதலாம், மூன்றும் இடங்களையும்,
2. படசாலைப் படிப்பு முடிந்தவர்கள் பகுதியில், முதலாம், இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

போட்டியில் பங்கு பற்றியோர் அனைவரும் போற்றுதற்குரியவர்கள்.

பரிசுபெறும் நோக்குடன் மட்டும் ஆக்கங்களைச் சமர்ப்பிப்பதோடு நின்றுவிடாமல், காவலன் மேலும் பல சிறப்பம்சங்களை வெளியிட எம் சிந்தனைகட்கு செயலுருவம் கொடுப்போமாக.

எனக்கு கிடைக்கவிருக்கும் பரிசுத் தொகையை எங்கள் ''காவலன்'' வளர்ச்சி நிதிக்கு ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வ. அ. இம்மானுவேல்,
ஊறணி,
காங்கேசன்துறை.

## பார்போஸாவின் நிகழ்ச்சி

பரத நாட்டியத்தில் பேர் பெற்றவரான பிதா பிரான்ஸிஸ் பார்போஸா பங்களூரில் பெப்ரவரி 22 ம் திகதி இடம் பெற்ற ஒரு கலாச்சாரநிகழ்ச்சியில் நடன விருந்தளித்தார். அவரது நடனத்தில் இராமாயணம் போன்ற இந்து சமய வரலாறுகளும் வேதாகமக் கருத்துக்களும் இடம்பெற்றன.

இக் காட்சியைக் கண்டு களித்த பிறமதத்தினர் இந்திய பாரம்பரிய நடனத்தை இவ்வளவு நுணுக்கமாகக் கற்று அதன் மூலம் கிறிஸ்தவ செய்தியை அளிக்க முயற்சி எடுத்த கத்தோலிக்க குருவானவரைக் கண்டு பெரிதும் வியந்தனர்.

## ஜப்பானில் பல்கலைக்கழகம்

ஜப்பானில் புதிய கத்தோலிக்க பல்கலைக்கழகம் ஒன்று ஆரம்பமாகவுள்ளது. உயர் கல்வி கற்கப் புகுவோர் தொகை 1993 க்குப் பின் குறைந்துவிடும் என சில நிபுணர்கள் அபிப்பிராயம் கொண்டிருந்தபோதிலும், புனித கத்தறீனம்மாள் பல்கலைக்கழகமும் வேறு 15 பல்கலைக்கழகங்களும் நம்பிக்கையுடன் 1988 ல் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

புனித சாமிநாதர் சபைத்துறவிகளால் இப்புதிய பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஏற்கெனவே 11 பல்கலைக்கழகங்களும் அநேக பாடசாலைகளும் இவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

## முருங்கனில் ஞானொடுக்கம்

முருங்கனில் கிறிஸ்தரசர் ஆலய வழிபாட்டுக் குழுவினருக்கான ஞானொடுக்கம் 4-3-88 அன்று மன்னார். குருமுதல்வர் அருட்திரு சேவியர் குரூஸ் அடிகளார் தலைமை தாங்கி நடாத்துவதற்கு அருட்திரு ஜெயபாலன் குரூஸ் அடிகளாரினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. புனித வாரத்தை எவ்வாறு அனுசரிக்க வேண்டும் என்பதற்கு அருட்திரு சேவியர் குரூஸ் அடிகளாரினால் அறிவுறுத்தல் செய்யப்பட்டது.

பின்னர் 15 நிமிட தனி செபங்களும் ஆலயத்தினுள் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அருட்சகோதரன் ஞானதிக்கம் அவர்களால் வழிபாட்டுக்குழுவினருக்கான வழிபாடும், அருட்திரு ஜெயபாலன் அடிகளாரின் திருப்பலியுடன் அன்றைய ஞானொடுக்கம் நண்பகல் 12-30 மணிக்கு நிறைவுற்றது.

தகவல்:- தி. சந்தியோகு
வழிபாட்டுக்குழு

## மண்டைதீவில் திருப்பாடுகளின் காட்சி

கடந்த பரிசுத்த வாரப் புதன் 30-3-88 அன்று மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய முன்றலில் யேசுவின் திருப்பாடுகளின் காட்சி பக்திப் பரவசமூட்டும் வகையில் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

மண்டைதீவு புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் சபை அங்கத்தவர்கள் நாற்பத்தைந்து பேரும் பங்கெடுத்து நீண்ட மேடையிற் சிறப்பாக நடித்துக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. யாழ் நகரின் சூழ்நிலைகாரணமாக பல பாகங்களிலும் நடித்துக் காட்டப்படாத இத்திருப்பாடுகளின் காட்சி மண்டைதீவுப் பங்கில் ஏறக் குறைய முப்பது ஆண்டுகளின் பின்னர் முதற் தடவையாக மேடையேற்றப் பட்டது.

இக் காட்சிக்கு தீவுப் பகுதி இறைமக்கள் பலரும் பாதுகாவலன் ஆசிரியர் உட்பட பலகுருக்களும் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

பீடப் பணியாளர் சபை,
மண்டைதீவு.

## சமய சமரசத்துக்கு பாராட்டு

''பிற சமய சமூகங்களுடன் எவ்வாறு ஒற்றுமையாக வாழ்வதென்றும், விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் முன்னேறிவரும் ஒரு நாடு எவ்வாறு தனது சமய உணர்வையும் வளம்மிக்க கலாச்சாரத்தையும் பாதுகாத்து வருவதென்றும் எமக்குக் கற்றுக் கொடுக்கலாம். இவ்வாறு மேற்கு ஜேர்மனியிலுள்ள நிதி

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியன்னை மீதுள்ள பக்தியின் மறைபொருள்

புனித மரி டி மொண்போட் மரியாள்மீது பக்திபற்றி மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் படிப்பிக்கிறார். ''மரியாள் மீதுள்ள உண்மையான பக்தி'', ''மரியாளின் இரகசியம்'' என்று இவர் எழுதிய நூல்களிற் தெளிவாக விபரிக்கிறார். மரியாள் மீதுள்ள பக்தியில் மரியாயின் சேனையாருக்கு தாம் குறிப்பிடும் குணங்கள் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். மரியாயின் ஆண்டில் ஆழச்சிந்திப்போம்

1. கன்னிமரியம்மாளோடு ஓர் உண்மையான ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டுமென்று டி மொண்வேட் பக்தி கோருகின்றது. அதன்படி ஒருவர் தம்மை முழுவதும் மரியம்மாளுக்கு அர்ப்பணிக்க வேண்டும். தன் நினைவுகள், செயல்கள் ஆன்மாவையும் உடலையும் சார்ந்த நன்மைகள், முக்காலத்துக்கும் உள்ள உடைமைகள் ஆகிய அனைத்தையும் சிறிதளவும் ஒதுக்கிவைக்காமற் கன்னிமரியம்மாளுக்கு முற்றும் ஒப்புக் கொடுக்கவேண்டும். சுருங்கச்சொன்னால், தனக்கென்றே எதனையும் வைத்துக்கொள்ளாமற் கன்னிமரியம்மாளை முற்றும் சார்ந்திருந்து ஓர் அடிமையைப் போல் தன்னை முற்றுமுழுதாக அவளுக்குச் கையளிப்பது தான் இப்பக்தியாகும். தன் தாயிடம் முற்றுமுழுதாகச் சரணடைவது மேன்மையானதே.

2. இவ்வுலகத்து அடிமைகள் தங்கள் நினைவுகளையும் ஆன்ம வாழ்வையும் தம் எசமானருக்கு அடிமைப்படுத்துவதில்லை. ஆனால் மரியம்மாளின் அடிமை தன் சுதந்திரத்தை முற்றும் தன் அரசிக்குக் கையளிக்கிறான். அதாவது தன் நினைவுகள், ஆன்மாவின் அசைவுகள், மறைவான செல்வங்கள், அந்தரங்க ஆற்றல்கள் எல்லாமே கையளிக்கிறான். கடவுளுக்காகச் செலவழிக்குமாறு தன் கடைசி மூச்சுவரை எல்லாவற்றையும் அவன் அவள்கையில்ஒப்படைக்கிறான். ஒப்புக்கொடுக்கும் செபம்:- ''என் அரசியே! என் தாயே! நான் முற்றும் உமக்குச் சொந்தம், எனக்குள்ளதெல்லாம் உமக்கே சொந்தம்.'' எனவே, ''மாசில்லாத் தாயே! எல்லா அருள் வளங்களின் மத்தியஸ்தியே! நான் இன்று சொல்லும் செபங்கள், செய்யும் அலுவல்கள், படும் துன்ப வருத்தங்கள் யாவற்றையும் உம்முடைய மாசில்லாத இருதயத்துக்கு என் முழுமனதோடும் முழுச் சத்துவத்தோடும் உமக்கே ஒப்புக்கொடுக்கின்றேன்'

3. இப்பக்தியில் கடவுளுக்காகத் தன்னலம் பலியாகின்றது. அந்தப் பலி கிறிஸ்துநாதருடைய பலியை மிகவும் ஒத்திருக்கிறது. அவருடைய பலி மரியம்மாளின் உதரத்தில் ஆரம்பித்து, அவளின் கரங்களால் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பொழுது பகிரங்கமாக உறுதிப்படுத்தப்பட்டு, தன் வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியிலும் நீடித்து இறுதியாகக் கல்வாரியில் அவளின் இதயமாகிய சிலுவையில் நிறைவேறியது.

4. முக்கிய கவனிப்பு:- தன்னை முழுதும் ஒழுங்குமுறைப்படி ஒப்புக்கொடுப்பதுடன் இந்த உண்மையான பக்தி ஆரம்பமாகிறது. ஆனால் இந்த ஒப்புக்கொடுத்தலின் படி வாழ்வதிற்றான் இப்பக்தி அடங்குகிறது. ஒருவனின் ஒரே ஒரு செயலோடு முடிந்துவிடுவதில்லை. அதுஒரு வாழ்க்கைநிலை வாழ்க்கை முழுவதும் மரியம்மாளுக்குச் சொந்தமாகவேண்டும், ஒப்புக்கொடுக்கும் செபத்தை அடிக்கடி சொன்னால் மட்டும் போதாது.

5. நம் இதயத்துடிப்பு நம் உடல் வளர்ச்சியை ஆள்வது போல உண்மையான பக்தி நம் ஆன்ம வளர்ச்சியை ஆளவேண்டும். நம் நினைவில்லாமலே சுயமாக இந்தப் பக்தி ஆன்ம வாழ்வை இயக்கிக்கொண்டிருக்க வேண்டும். நாம் மரியாய்க்குச் சொந்தமென்று உணர்வதுபோதும். அவ்வுணர்வை: ஒப்புக்கொடுத்தல் முயற்சி-மனவல்லயச் செபம் நினைவு கூர்ந்த வழிகளில் இந்த உணர்ச்சி மங்கலாக வேனும் நம் உள்ளத்திலிருந்து வாழ்க்கையிற் பல்வேறு அலுவல்களை இயக்கிக்கொண்டிருக்க வேண்டும். இது உண்மையானதாயிருந்தால் மிகுந்த பயனுண்டு.

6. உண்மையான பக்தி மிக்க உறுதியான தீர்மானம், விசுவாசம் ஆகிய அடித்தளங்களில் கட்டப்படவேண்டும். டி மொண்வேட்டின் வழியில் இப்பக்தியைக் கடைப்பிடித்தவர்கள் ஏராளமான அருள் வரங்களைப் பெற்றிருக்கிறார்கள் இந்தப் பக்தி திருச்சபையில் மிகவும் சிறப்புற்று விளங்குகிறது.

7. இப்பக்தி மோட்சத்திலிருந்து வந்த ஒரு தூதுக்குரலொலி என்னலாம். இந்தப் பக்தியில் உண்மையாகவே வளர்ந்தவர்கள் தாம் அடைந்த ஏராளமான நன்மைகளைப் பற்றி உணர்ச்சிப்பெருக்குடன் பேசுவார்கள், அவர்கள் பெற்ற ஏராளமான ஞானவல்லமைகள் அருள்களுக்குச் சான்று பகர்வார்கள். ஏனெனில் இப்பக்திக்குரிய எல்லா வாக்குறுதிகளும் கண்டிப்பாக நிறைவேறும் என்று டி மொண்வேட் அறுதியிட்டுச் சொல்லுகிறார்.

8. இப்பக்தியைக் கண்டுணர்ந்து வாழ்க்கையிற் கடைப்பிடித்தவர்கள் ஞான வாழ்க்கையில் வளர்ந்து தன்னலமறுப்பு, தூய கருத்து ஆகிய இரண்டு அரிய குணங்களால் அலங்கரிக்கப்படுவர். ஏனெனில். மரியாயே தங்களைக் காப்பாற்றுகிறார். வழிகாட்டுகிறார் என்ற மனஉறுதி பெற்றவர்களாய் அதற்கேற்ப இசைந்து வாழ்வர். வாழ்க்கை மிகவும் மேலான வகையில் பயன்பெறுகின்றது. உள்ளங்களை ஆட்கொள்ளுகின்றது என்றமகிழ்ச்சியோடுவாழ்வர்.

9. உண்மைப் பக்தியில் உருக்கொண்டவர்களாய் முற்றும் மரியாயின் வாழ்வும் உறவும் இரண்டறக்கலந்தவர்களாய் வாழ்வார்கள். ஆம், இவர்களுக்கு இயற்கைக்கு மேலான குறிக்கோள்கள், உறுதியான விசுவாசம், குன்றாத தைரியம், செயல்களில் மிக்க ஊக்கம், விவேகமும் இரக்கமும் ஒன்றிணைந்து ஆற்றல்களும் பக்குவப்படும். இனிய தாழ்ச்சி, மேலான அருள்வளம், தகுதியையும் மிஞ்சிய அலுவல்களில் பொறுப்பேற்பு அதேவேளையில் அவ்வலுவல்களைச் செய்துமுடிக்க அபார உதவியும் பெறுவர். சுருங்கச் சொன்னால் தங்களைக் கையளித்த தியாகத்திற்குக் கைம்மாறாக ஒன்றுக்கு நூறாக நன்மை அடைகிறார்கள். ''நாம் பணிபுரியும் பொழுது ஆட்சி புரிகிறோம்; நாம் கொடுக்கும் பொழுது பெறுகிறோம்; நாம் சரணடையும் பொழுது வெற்றி பெறுகிறோம் என நியூமன் கூறுகிறார்.

10. நீங்கள் முற்றும் அடிமையாகி ஆன்மீக செல்வங்களையெல்லாம் கையளித்தால் கன்னிமரியம்மாளும் உங்கள் தனித்தீர்ப்பு நேரத்தில் உங்களுடன் கூடிநிற்பாள் என்பது மறுக்க முடியாத உண்மை. அவளிடம் நீங்கள் ஒப்புக்கொடுத்த எல்லாவற்றையும் அவளே கண்காணிப்பாள். உங்கள் தேவைகளையெல்லாம் அவளிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும் முடியும். ஏனெனில் கடவுளின் செல்வங்களை எல்லாம் அவளே பாதுகாத்து வருபவள். அதற்கேற்ற வல்லமை அவளுக்குண்டு. மிக்க அக்கறையுடன் உங்கள் மட்டில் அவள் நடந்து கொள்வாள்.

11. உங்கள் ஆன்ம இரட்சணியமும், பரிசுத்ததனமும் தேவைகளும் அவளுடைய பொறுப்பு. ஏனெனில் அவளுடைய கருத்துக்களுள் முதன்மையானது உங்களைப்பற்றியதுதான். தியாகம் (தியஜ் = விட்டுக்கொடு) பயனை எதிர்பாராதது. பெருந்தன்மையுடன் கொடுக்கப்பட்டவை ஏராளமானவர்களுக்கு நன்மை பயக்கும். கடவுளின் அருளும் கொடைகளும் உங்கள் கையளிப்புக்கள் மூலம் பகிர்ந்தளிக்கும் பாக்கியம் பெறுவீர்கள்.

12. மரியம்மாளுக்கு ஒப்புக்கொடுத்தபிறகு தன்னுடைய சாதாரண செபம், அலுவல், கருத்துக்களைச் செய்து வரலாம் ஆனால் மரியம்மாளுடைய விருப்பத்துக்குக் கீழ்ப்பட்டு இவற்றையெல்லாம் செய்ய வேண்டும். அவளுடைய ஏவலுக்குச் செவிசாய்த்து அன்பு, தியாகம் ஆகிய பாத்திரங்களில் பல்வேறு அலுவல்கள் என்னும் நீரை இயன்ற மட்டும் ஊற்றினால் கானாவூர்ப் புதுமை மீண்டும் நிகழும். நம் எளிய செயல்கள். அவை நமக்கும் பிறர்க்கும் பயன்படத்தக்க வகையில் கடவுளின் அரிய வரங்களாக மாறும் என்கிறார் காசின் நூலாசிரியர்.

(சேனைக் கைநூல் 277—286)

— வித்துவான் அ.சந்தியாப்பிள்ளை

# தேனருவி

## பாஸ்கா 4ஆம் ஞாயிறு

## அவர் மந்தையின் ஆடுகள்

அப். பணி: 4: 8-12, 1 அரு. 3: 1-2 அரு. 10: 11-18

ஆயன்-மந்தை அன்புறவில் ஆயனிடம் விளங்கும் கரிசனை, கவனம், இரக்கம், பாசம் போன்ற பண்புகள் நிகரற்ற ஆயன் இறைவனிடம் நிறைவாக உண்டு. இறைவனும் தன் மக்களாகிய ஆடுகளை மேய்க்க மனித மீட்பர்களை அனுப்பினார். பட்டதாரிகள், ஆற்றல் மிக்கவர்கள், வலிமை படைத்தவர்கள் என வழிகாட்டிகளாக விளங்கிய இவர்கள் ஆடுகளை மேய்க்காது - தம்மையே மேய்த்துக் கொண்டனர். இதனால் - ஏமாற்றமே எஞ்சியது. எனவே இறைவன் இப்போலி மேய்ப்பர்களாகிய கூலிப் படையினரை ஒழித்துவிட்டு தாமே நல்லதோர் மேய்ப்பனாக வருகின்றார்.

ஓர் ஆயன் வெறும் கூலியாளனாக மாறிடக் காரணம் ஆடுகள் மீதுள்ள அன்பு வற்றிப் போவதேயாகும். ஆனால் யேசுவோ ''என்னாடுகளை நான் அறிவேன்.'' அதாவது அன்பு செய்வேன் எனக்கூறி தனது உண்மைத்தனத்தையும், நன்மைத்தனத்தையும் வெளிப்படுத்துகிறார். தனதுயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு வேறில்லை என்பதற்கிணங்க அன்பிற்குச் சிகரமாகிறார். தியாகமே தலைமைத்துவம் என்கிறார். ''என்னாடுகளுக்காக என் உயிரைக் கொடுக்கிறேன்,'' அரு. 10 : 15. இத்துணை நல்லாயனின் மந்தை யார்? நாமே 'அவர் மந்தையென்றால் எம் நிலை என்ன? அவரை அறிந்து, அவரின் குரலுக்கு செவி மடுக்கும் மந்தைகளா நாம்?

இன்று பல குரல்கள் எம் செவிகளைத் துளைக்கின்றன. உண்மைக் குரல் எது என்பதைத் தேர்ந்து, தெளிய வேண்டும்.

பசுமையான இரை போடுகின்றான் என்பதற்காக ஒருவன் பின் செல்லும் ஆடு இறுதியில் இரை போடுபவனுக்கே இரையாகின்றது.

குரலில் கனிவிருப்பது போலத் தான் தெரிகின்றது. நுனியில் இனிப்பு ஆனால் அடியில் கசப்பு என்பதனை உணராது விடுகிறோம்.

பதவி உயர்வுகள், பாராட்டுக்கள், சமுகத்தில் பெரும் புள்ளிகளாக உயர்ந்திட, உறுதிமொழிகள் அக்குரலில் தொனிக்கின்றன. ஆனால் அவை மனச்சாட்சியை விற்கவும், நண்பர்களைக் காட்டிக் கொடுக்கவும், கொள்கைகளைக் களையவும் ஒலிக்கும் குள்ளர்களின் ஊளைக் குரல் என்பதை அறியாது இருக்கின்றோம்.

பரிசேயர்களுக்கும், மூப்பர்களுக்கும் செவிமடுத்து ''சிலுவையில் அறையும்'' என உரக்க, உரக்கக் கூவிய மக்களின் மனச் சாட்சியை மீளத் தட்டி யெழுப்பி ''விலக்கப்பட்ட கல்லே மூலைக்கல்லு' என யேசுவின் உண்மைத் தனத்தை நிரூபிக்கின்றார் புனித இராயப்பர்.

இறைவனின் மக்கள், அவர் மந்தை என அழைக்கப்படக் கொடுத்து வைத்தவர் யார்? அவரது குரல் கேட்க இறைவார்த்தைக்கு செவிமடுத்து அதை உள்ளத்திலிருத்தி தியானிக்க வேண்டும். தியாக சிந்தையுள்ள, தன்னலமற்ற வழிகாட்டிகளை இனம் கண்டு வழி நடத்தல் பெற வேண்டும். நல்லாயன் யேசுவால் அன்பு செய்யப்பட்டு, வழி நடத்தப்பட எம்மைக் கைநெகிழ வேண்டும். ஒரே மந்தை உருவாக நாம் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

சுவாமி. ஜீவா போல். அ.ம.தி.

# மிகப் பெரிய பாடம்

ஒரு காரியத்தின் முடிவில் கிடைக்கும் பயனில்கருத்தைச் செலுத்துமளவிற்கு அந்தக் காரியத்தைச் செய்யும் முறையிலும் கருத்தைச் செலுத்த வேண்டும். இது என்னுடைய வாழ்க்கையில் நான் கற்றுக்கொண்ட மிகப் பெரிய பாடங்களுள் ஒன்றாகும். இந்த ஒரு பாடத்திலிருந்து பல பெரிய விடயங்களை நான் எப்போதும் கற்றுக்கொண்டு வந்திருக்கின்றேன். குறிக்கோளுக்குச் செலுத்தும் கவனத்தை, அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்த வேண்டும் என்பதில், வெற்றிக்கு உரிய எல்லா இரகசியமும் அடங்கியிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்.

நாம் ஏன் உலகிற்கு நன்மை செய்ய வேண்டும் ? மேலோட்டமாகப் பார்த்தால் உலகிற்கு நன்மை செய்வதாகத் தோன்றும் ஆனால் உலகிற்கு நன்மை செய்வதனால், உண்மையில் நாம் நமக்குத் தான் உதவி செய்து கொள்கின்றோம்.

உயர்ந்த பீடத்தில் நின்று உனது கையில் ஐந்து காசு

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)


வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டியில் முதற் பரிசு பெற்ற கட்டுரை

## பொதுநிலையினர் சிறப்பாண்டு

க. பொ. த. (உ. த.) மாணவர் பகுதி
கிறிஸ்து நேசரெட்ணம் பாவிலு "தமிழ் நேசன்"
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.



**பொதுநிலையினரின் வாழ்விற் கிறிஸ்தவ மதிப்பீடுகள்**

திருச்சபையின் வரலாற்றிலே பொது நிலையினரின் முக்கியத்துவம் என்றுமில்லாதவாறு இன்று பேசப்படுகின்றது. திருச்சபையின் அமைப்பிலே பொது நிலையினர் வகிக்கும் இடம் மிகப் பரந்ததாகும் பொது நிலையினர் எனப்படுவோர், குருகுலத்தாரும், திருச்சபையின் அனுமதி பெற்ற துறவறத்தாரும் ஏனைய விசுவாசிகள் அனைவருமாகும். பொது நிலையினரின் எழுச்சியே திருச்சபையின் மலர்ச்சி. ஆகையால் பொது நிலையினரின் பொற்காலமான இக்காலகட்டத்தில் அவர்களது வாழ்வு முறையைப் பற்றிக்கண்ணோட்டம் செலுத்துவது சாலவும் பொருத்தமானதாகும் மாறி வரும் உலகிலே, காலஓட்டத்திற்கு ஏற்ப அவர்களது வாழ்வு முறையும் மறை நூலின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும்

"நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" (1 கொரி, 9: 16) எனப் பகர்கின்றார் அப்போஸ்தலரான புனித சின்னப்பர் ஞானஸ்நானத்தின் மூலம் திருச்சபையில அங்கத்துவம் பெற்ற அனைவருக்கும் நற்செய்தியை அறிவிக்குப் பணி விரும்பியோ, விரும்பாமலோ ஒப்படைக்கப்படுன்றது. இந்நிலையில் பொதுநிலையினர் தமது சிறப்பான கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் கொண்ட வாழ்க்கை முறையினுலேயே இந்த நற்செய்திப் பணியை நிறைவேற்ற வேண்டும். உலகம் எதிர்பார்க்கின்ற மதிப்பீடுகளுக்கு எதிர்மாறுன ஒரு மதிப்பீட்டையே கிறிஸ்தவ மதிப்பீடுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. உலக வரலாற்றிலே, உலக மக்களிடையே, நீங்கா நினைவலைகளை விட்டுச் சென்றுள்ள மறை நூலின் அரிய கருத்துக்களில், நிலையான கருத்துக் குவியலாக விளங்குவது மலைப்பொழிவு ஆகும்.

இயேசு பிரானின் மலைப்பொழிவின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் தம் வாழ்க்கை அமைப்பைச் சீர்ப்படுத்த வேண்டும். அண்ணல் காந்தியடிகளாலும் பாராட்டப்பட்ட மலைப்பொழிவு இன்றைய பொது நிலையினருக்கு வாழ்க்கைப் பாடமாக அமைய வேண்டும். மனித வாழ்வில் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டு வாழ முற்படும் அனைவருக்கும் இந்த மலைப்பொழிவு சிறப்பான மதிப்பீடுகளை வழங்குகின்றது

இன்றைய நவநாகரீக உலகம் எதிர்பார்க்கின்ற மதிப்பீடுகளுக்கு ஒரு சவாலாகக் கிறிஸ்தவ மதிப்பீடுகள் அமைந்துள்ளன. பழிக்குப்பழி வாங்குதல், பொறாமை, குரோத மனப்பான்மை, பொய், வஞ்சனை, ஏமாற்றுதல் ஆகியவற்றிற்கு எதிரான நடவடிக்கைகள் சட்டத்திற்கு உட்பட்டோ அல்லது உட்படாமலோ இருக்கலாம். ஆனால் உலக மதிப்பீட்டின்படி குற்றம் செய்தவனைச் சட்டத்தின்படி தண்டிக்கவேண்டும். தீமை புரிந்தவனுக்குப் பதில் தீமையே செய்யவேண்டும். ஆனால், கிறிஸ்தவ மதிப்பீடுகள் இவற்றையெல்லாம் கடந்த "உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்" (மத். 5: 44) என்னும் உயர்வான மதிப்பீட்டைக் கொண்டுள்ளது.

அனைத்து மதங்களுமே அன்பைப்பற்றி அதிகம் பேசுகின்றது. எமது திருமறையும் இங்கு விதிவிலக்கன்று பகைவர்களுக்கும் அன்பு செய்வது என்பது கிறிஸ்தவ மதிப்பீடு இந்த மதிப்பீடானது மனிதர்களினுல் கடைப்பிடிப்பதில் பாரிய சிக்கல்களை ஏற்படுத்துவதாய் அமைகின்றது. எந்தவொரு மனிதனும் பகைவரை அன்பு செய்யத் தயங்குவது இயல்பானதே. ஆனல் பொது நிலையினராக அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் இந்த கிறிஸ்தவ மதிப்பீட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். உலக நோக்கத்திற்கும் அதன் எதிர்பார்ப்பிற்கும் அப்பாற்பட்ட மதிப்பீடாகப் பகைவரை அன்பு செய்தல் அமைகின்றது. இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் ஓர் உயர்வான அழைப்பைப் பெற்றவன் என்பதனுல் மேலான மதிப்பீடு அவனது வாழ்வில் எதிர்பார்க்கப்படுகின்றது. அதிலும் பொது நிலையினராக அழைக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் மேல் சுமத்தப்பட்ட கடமையும் கூட. இறைமக்களாக அழைக்கப்பட்டவர்கள் உலகில் அன்பையும், சமாதானத்தையும் பரப்பும் கருவிகள் திருச்சபையிலும் உலகிலும் பல்வகைப்பட்ட துறைகளில் நம்மை ஈடுபடுத்தி உழைக்கும் இவர்கள் பகைவர்களையும், வெறுப்பவர்களையும் அன்பு செய்யவும், மற்றவர்களை அன்பு செய்யத் தூண்டவும் வேண்டும்.

உலக சமாதானத்திற்காக மனித உள்ளங்கள் ஏங்கித் தவிக்கும் இக்கால கட்டத்தில் "உங்களை துன்புறுத்துவோருக்காகச்செபியுங்கள்" (மத். 5: 44) என்னும் மதிப்பீடு எம் சிந்தனையை தூண்டுவதாக அமைகின்றது. சாதாரண நடைமுறை உலகியல் வாழ்வில் துன்புறுத்துவோருடன் உறவாடுவது, அல்லது அவர்களை ஏற்றுக்கொள்வது என்பது சாத்தியப்படாதஒன்று. ஆனல் மனித மதிப்பீட்டின்படி இது கடினமாசத் தோன்றினுலும் பொது நிலையினராக அழைக்கப்பட்ட அனைவருக்கும் இது தேவையானது கிறிஸ்தவ மதிப்பீடுகள் காட்டும் பாதை ஒடுக்கமானது ஆனல், அதன் வழியேதான் செல்லவும் வேண்டும். எனவே பொது நிலையினர் தம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் தம்மை துன்புறுத்துபவர்களை ஏற்க, புரிந்துகொண்டு சகித்துக் கொள்ள அறியவேண்டும். "கண்ணுக்கு கண் பல்லுக்கு பல்" (யாத் 21: 24) என்ற கோட்பாடு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வகுத்த சட்டமாய் அமைந்தது. ஆனல், இன்றைய எம் திருச்சபைக்கு இறைமகன் இயேசு அதைவிட மாறுபட்ட மதப்பை அளிக்கின்றார் என்பதை நாம் உணர வேண்டும்.

எளிய மனமும், தூய உள்ளமும், இரக்க சிந்தையும் மனித வாழ்வின் மணிமுடிகள் பொது நிலையினரின் வாழ்வில் இவ்விரு கிறிஸ்தவ மதிப்பீடுகள் மிளிர வேண்டும். எளிய மனம் என்பது உள்ளத்து ஏழ்மையையும், உண்மையான நேர்மை நேர்மையின் மனச்சான்றையும் குறிக்கின்றது. இன்றைய நாகரீகப் போக்கிலே இவை மனித வாழ்வில் பின்தள்ளப்படுவது கண்கூடு. அனல் திருச்சபையானது மனித உள்ளத்தில் ஏழ்மையை நிலைநாட்டவும் அதன்மூலம் உள்ளத்தூய்மையை எதிர்பார்த்தும் உழைக்கின்றது. பொது நிலையினரின் வாழ்வானது இவ்வாருன மதிப்பீட்டில் அமையவேண்டும் இன்றைய காலகட்டத்தில் உருவாகியுள்ள புதிய பிரச்சினையான அகதிகள் மட்டில் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இரக்க சிந்தையுடன் அவர்களின் அவலநிலையைப் பொது நிலையினர் நோக்கவேண்டும் இத்தகைய வாழ்வே கிறிஸ்தவ மதிப்பீட்டைக் கொண்டு வாழப்படும் வாழ்வாகும்.

இன்றைய காலகட்டத்தில் நீதியானது குழிதோண்டிப் புதைக்கப்பட்டு மனித மாண்புகள் மழுங்கடிக்கப்பட்டு மறைக்கப்படுகின்றன. எனவே சமாதானத்திற்கான தாகம் பலரை வாட்டுகின்றது. எங்கும் சமாதானத்தின் அவசியம் பற்றி அதிகம் உணரப்படுகின்றது. இந்நிலையில் "உலக சமாதானம் வேண்டுமா உன்னையே திருத்திக்கொள்" என்ற பரிசுத்த தந்தை அருள் சின்னப்பரின் அழியாப் பொன்மொழி எம் இதயக் கதவுகளைத் தட்டவேண்டும். மேடைகளில் ஏறி, சமாதானம் பற்றிப் வானம் மட்டும் கேட்கும்படியாக முழங்கலாம். பத்திரிகைகளில் சமாதானம் பற்றி பக்கம் பக்கமாக எழுதிக் குவிக்கலாம். மற்றவர்களின் அநியாயங்களைப் பற்றி விரிவாக விளக்கமாக எடுத்துக்கூறலாம். ஆனல், சமாதானம் என்பது ஒவ்வொரு பொதுநிலையினரின் உள்ளத்து மாற்றத்திலேயே அடித்தளம் இடப்படவேண்டும். இன்றைய சமாதான மற்ற நிலைக்கு மற்றவர்களைக் குறை கூறி சாதிக்கப்போவது எதுவுமில்லை. எமது உள்ளத்தில் அமைதி, சமாதானம் இல்லையேல், எமது சமூகத்திலும் எப்படி அமைதி சமாதானம் உருவாக முடியும்?

இன்றைய எம் சமூகத்தில் "நீதியின்பால் பசிதாகமுள்ளோர், (மத் 5; 6) நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் (மத். 5: 10) சமாதானம் செய்வோர் (5: 9) பற்றிய மதிப்பீட்டில் பொது நிலையினரின் பங்களிப்பு மேலானதாகும். நீதியின்பால் பசிதாகமுள்ளவர்களாக இன்று எத்தனையோ பொது நிலையினர் சிறைச்சாலைகளிலும் அகதி முகாம்களிலும் அல்லல் படுகின்றனர் இத்தகையோர் மட்டில் ஏனைய பொதுநிலையினரின பணி பற்றிச் சிந்திக்க வேண்டும். நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்பட்டு வாடுவோர் வாழ்வில விமோசனத்தை ஏற்படுத்தி அவர்தம் வாழ்வை வளப்படுத்த ஒவ்வொரு பொதுநிலையினருக்கும் உரிமையும், கடமையும் உண்டு. இதை உணர்ந்து சமாதானத்தின் குரலை, நீதியின் குரலை எழுப்ப வேண்டும். அப்போதுதான் மேகங்களும் நீதியைப் பொழியும்.

"மன்னிக்கும் உள்ளம் மாணிக்கக் கோயில்" என ஆன்றோர் மொழிந்துள்ளனர். மன்னிப்பு அல்லது சகித்தல் என்ற கிறிஸ்தவ மதிப்பீடு பொதுநிலையினர் வாழ்வில் விளங்குமாயானுல் சமுதாயச் சூழலிலே பல்வேறுன பிரச்சினைகளை தவிர்க்க முடியும் ஒவ்வொரு பொதுநிலையினரும் ஏதோ ஒருவகையில் மற்றவரில் தங்கி வாழகின்றனர். ஆகவே கிறிஸ்தவ மதிப்பீட்டின்படி தமது வாழ்வை அமைத்து வளம்படுத்த அடிப்படையான மதிப்பீடாக மன்னிப்பு அமைகின்றது. அன்பையும், அறத்தையும் நிலைநாட்டி ஒரே குடும்பமாக வாழ்ந்த ஆதிக் கிறிஸ்தவ சமூகத்தின் (அப். பணி. 4: 32; 37) வாழ்வு முறை இன்றைய பொதுநிலையினரின் வாழ்வுக்கு சவாலாக அமைகின்றது.

இன்றைய சமூகத்தில் ஒருவர் மற்றவரை சந்தேகக்கண் கொண்டு நோக்குகின்றனர். உண்மை என்பது அரிதான பொருளாகி விட்டதனுல் சந்தேகங்கள் மலிந்துவிட்டன. இந்நிலையில் பொதுநிலையினர் உண்மையின் சாட்சிகளாய் திகழவேண்டும். "உள்ளத்திலே உண்மைஒளி உண்டாயின் வாக்கினிலே நல் ஒளி உண்டாம்" என்ற புதுமைக்கவி பாரதியின் கவி முழக்கம் எம் செவிகளில் எதிரொலிக்க வேண்டும். உண்மைக்குப் புறம்பான நடவடிக்கைகள் எங்கும் இடம் பெறுவதனுல் 'புரிந்துகொள்ளாமை' என்ற நிலைப்பாட்டில் இன்றைய சமுகம் நிலை தடுமாறுகின்றது. எனவே, பொது நிலையினர் உண்மையின் தீபங்களைச் சுடர் விட்டு எரியச் செய்து சந்தேகங்களைச் சாகடிக்கவேண்டும்.

ஒவ்வொரு மறைவட்டத்தின் கீழும் இயங்கும் ஒவ்வொரு பங்கும் ஒரு குட்டித் திருச்சபை. எனவே பங்கின் வளர்ச்சிக்குப் பங்குத் தந்தையுடன் இணைந்து பொதுநிலையினர் உழைக்கவேண்டும். பக்திச் சபைகளில் அங்கம் வகிக்கும் பொதுநிலையினர் தம்மிடையே கிறிஸ்தவ மதிப்பீட்டை வளர்க்கவேண்டும். பங்குத தந்தைக்கும் பங்கு மக்களாகிய பொது நிலையினருக்கும் இடையில் பரஸ்பரம் புரிந்துகொள்ளுதல் என்பன அத்தியாவசியமானவை. எந்தவொரு சிக்கல்களையும் உடனுக்குடன் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் பங்கு மட்டத்திலே ஆழமான புரிந்துணர்வு பங்குத்தந்தை-பங்குமக்களுக்கு இடையில் மலர முடியும்

பொது நிலையினராய் அழைக்கப்பட்டுள்ளவர்கள பல்வேறு அரசாங்க தனியார் நிறுவனங்களில் தொழில் புரிகின்றனர். ஏன்சாதாரணமான நாளாந்த உழைப்பாளிகளாகவும் காணப்படுகின்றனர். இவர்கள பல மக்களோடும், பல மதத்தினரோடும் பழகவும், தொடர்பு கொள்ளவும் வாய்ப்பு உண்டு. எனவே, இந்நிலையில் தாம்பணி புரியும இடங்களில கிறிஸ்தவத்தின் உயர்வான மதிப்பீடுகளை அவர்கள் தம் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு வாழ வேண்டும் "விளக்கைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைக்க மாட்டார்கள். மாருக வீட்டில் உள்ள அனைவருக்கும் ஒளிதரும் பொருட்டு விளக்குத் தண்டின்மீது வைப்பார்கள்" (மத். 5:15) என உரைக்கும் இயேசுபிரான் ஒளியாகிய அவரது மக்கள் கிறிஸ்தவ மதிப்பீட்டில் வாழ்ந் ஒளிபரப்ப வேண்டுமென வரும்புகின்றார். எனவேதான் பொதுநிலையினரின் அட்போஸ்தலப்பணி பற்றி இரண்டாம் வத்திக்கான்சங்கம் அழகாக எடுத்தியம்பியது.

"நற்செய்தி மனப்பான்மையால் தூண்டப்பெற்று, தங்களுக்குரிய அலுவலை ஆற்றுவதினுல் பொதுநிலையினர் புளிக்காரம்போல் உலகில் இருந்து கொண்டே உலகைப் புனிதப் படுத்துவதற்கும், விசுவாசம் நம்பிக்கை, பரமஅன்பு இவைகளினுல் ஒளிர்கின்ற தங்கள் வாழ்வின் சான்ருகக் கிறஸ்துவைப் பிறருக்குக் காட்டவும் இறைவனுல் அழைக்கபபடுகின்றனர்" (திருச்சபை31) மக்கள் இன்று எதிர்பார்க்கும உலக மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்ட மதிப்பீட்டை, அதிலும் உயர்வான மதிப்பீட்டையே பொது நிலையினர் கைக்கொள்ள வேண்டும்.

இன்று உலகிலே ஏன் எம் சமூகத்திலே நாத்த நாஸ்திக நச்சுப்பாம்புகள் உலாவி வருகின்றன. பல இளைஞர் சமூகம் இதில் கவரப்பட்டுள்ளராயினும் பொதுவாக பொதுநிலையி

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

### தியாகப் பயணம்

இந்திய அமைதிப்படைக்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒக்டோபர் 10 ஆம் திகதி ஆரம்பமான போர் ஐந்து மாதங்கள் நீடித்துப் பேரழிவுகளை உண்டுபண்ணியதால் அதனை முடிவுக்குக் கொண்டுவர எண்ணி மட்டுநகர் அன்னையர் முன்னணியின் பிரதிநிதியாக திருமதி அன்னம்மா டேவிற் ''சாகும் வரை உண்ணாவிரதம்'' மேற்கொள்ள முன்வந்தார்.

''ஒரு வாரத்தில் உடன்பாடு ஏற்பட்டுவிடும். தாம் உயிரோடு திரும்பி விடமுடியும்'' என்ற நம்பிக்கையிலேயே, இந்த உண்ணாவிரதத்திற் குதித்ததாக அவர் கூறியதாக அறிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டு மக்கள் தொடர்ந்து 5 நாட்களுக்கு திருமதி அன்னம்மா டேவிற் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தபின் கூறியவற்றைக் கேட்டுத் திகைத்தனர். வடக்கில் தமிழ் மக்களுக்காகத் தினமும் மாலையில் 5 மணி நேரம் விசேட தொலைக்காட்சி ஒளிபரப்பு நடைபெறுவது எல்லோரும் அறிந்ததல்ல. இதில் ஒரு அங்கமாக இரவு 9-15க்கு தமிழ்ச் செய்தி யாழ் மக்களுக்கென தயாரிக்கப்பட்டுத் தரப்படுகிறது. அதிலே தான் சுகம் பெற்ற அன்னம்மா டேவிற்றைக் கண்டனர்.

''திலீபனின் தியாகப்பயணம்'' அன்று தடுத்து நிறுத்தப்பட்டிருந்தால் அவர் என்ன கூறியிருப்பார்?

திலீபன் உண்ணாவிரதம் இருக்க முற்பட்ட போது முன்வைத்த கோரிக்கைகள், தமிழ் ஈழ விடுதலை புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையிற் போர் ஆரம்பிக்குமுன் இருந்த சூழ்நிலைகளை மையமாகக் கொண்டவை.

ஆனால், அன்னையர் முன்னணியின் உண்ணாவிரதத்தின் நோக்கம் போரை நிறுத்திப் பேச்சுவார்த்தையை ஊக்குவிப்பதாகும்.

முன்னையது போரைத் தடுக்க முயற்சித்தது. பின்னையது போரை நிறுத்த முயற்சித்தது. போரைத் தடுக்கும் முயற்சியும் தோல்விகண்டது. போரை நிறுத்தும் முயற்சியும் தோல்வி கண்டுள்ளது.

திலீபனின் மரணம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன் எடுத்துச் சென்றதா? அல்லது பின் அடைய வைத்ததா என்பதற்கு வரலாறு சான்று பகரும்.

அன்று இருந்த சூழ்நிலையிற் திலீபனைக் காப்பாற்றுவதற்கு பலருக்கு வல்லமை இருந்தது. அவர்கள் முயற்சி செய்திருந்தால் நிச்சயம் வெற்றி கண்டிருக்க முடியும். எத்தனையோ அழிவுகளைத் தடுத்திருக்க முடியும்.

''இன்றுள்ள நிலையில் எம்மால் எதுவும் செய்ய இயலாது'' என்பதுதான் பெரும்பான்மையான மக்களின் கருத்தாக உள்ளது. இது ஓரளவுக்கு உண்மையானதே.

இத்தகைய ஒரு குழப்ப நிலை ஒரு புதிய சகாப்தத்தின் பிறப்பிடமாக மாறலாம். ' உன்னையே நீ அறிவாய்'' என்றாற் போல் ஒவ்வொருவரும் தமது வரையறுக்கப்பட்ட தன்மையை உணர்ந்துகொள்ள, குறைபாடுகளை உணர்நதுகொள்ள உகந்த சூழ்நிலையாகவே இதனைக் கொள்ளலாம்.

இலங்கை இனப்பிரச்சினையில், இந்தியா நடந்துகொண்ட விதததை ஆராய; சிறுபான்மைத் தமிழர் மட்டில் பெரும்பான்மைச் சிங்களவர்கள் இன அழிப்பை ஊக்குவித்ததை உணர்ந்துகொள்ள; ஏன் தமிழர்களும் தமது தவறுகளைப் புரிந்து கொள்ள ஏற்ற காலம் இதுவே.

இலங்கை இனப்பிரச்சினையின் நீண்ட வரலாற்றிற், கடந்த ஆறுமாதங்களும் புதிய சகாப்தத்தின் பிறப்பின் பேறுகால வேதனைக் காலங்களாகக் கொள்வோம். சுகப்பிரசவத்தின் மகிழ்வுக்காய்க் காத்திருப்போம்.

**''நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்''**

# ''மீட்பரின் அன்னை''

### திருத்தந்தையின் சுற்றுமடல் (10)

ஆகவே, கூட்டத்திலிருந்த பெண்மணிக்கு மறுமொழியாக யேசு கூறிய ஆசிமொழி அவளையே முதன்மையாகக் குறிக்கவில்லையா? உடல் ரீதியாக யேசுவின் தாயான சம்பவத்திலேயே, சந்தேகத்துக்கிடமின்றி மரியாள் வாழ்த்துதற்குரியவள் ஆகின்றாள் (''உம்மைத் தாங்கிய வயிறும் நீர் பாலுண்ட கொங்கைகளும் பேறு பெற்றவை'') அத்துடன் அதற்கு மேலாக, ஏற்கெனவே வானதூதனின் அறிவிப்பின் போது இறைவனின் வார்த்தையை ஏற்றகாரணத்தினாலும், அதை விசுவசித்த காரணத்தினாலும், இறைவனுக்குக் கீழ்ப்படிந்த காரணத்தினாலும், இறை வார்த்தையை ''உள்ளத்திலிருத்தி சிந்தித்து வந்த'' காரணத்தாலும் (லூக் 1:38, 45;2:19.51) தன் வாழ் நாள் முழுவதும் அதை நிறைவேற்றிய காரணத்தாலும் அவள் வாழ்த்துதற்குரியவள் ஆகின்றாள் எனவே, அறியப்படாத அப்பெண் கூறிய வாழ்த்துக்கு யேசுவினாற் கூறப்பட்ட மறுமொழி, வெளித் தோற்றத்தில் மாறுபட்டது போல் இருந்தாலும் அதற்கு எதிரானதல்ல; தன்னை 'ஆண்டவரின் அடிமை' (லூக் 1:38) என்று அழைத்த இக் கன்னித் தாயின் மட்டில் அந்த வாழ்த்துரையோடு சரியாக ஒத்திருக்கிறது என்று சொல்லலாம் ''எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள்'' (லூக் 1:48) எனப் போற்றப் போவது உண்மையானால், ஊர் பெயரற்ற அப்பெண்மணிதான் முதல் முதல் தன்னையுமறியாமல் மரியாளின் ''என் ஆன்மா'' என்ற பாடலிலுள்ள அந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளை உறுதி செய்து காலமெல்லாம் ஒலிக்கப் போகும் வாழ்த்துப் பாடலைத் தொடங்கி வைத்தாள் என்று சொல்லலாம்.

## தாய் என்ற முறையில் மரியாள் ஒருவிதத்தில் மகனிடம் முதற்சீடர் ஆனாள்

விசுவாசத்தின் மூலம், பரிசுத்த ஆவியின் வல்லமையாற், தன் கன்னிமை கெடாமல் பிதா தனக்களித்த திருமகனைக் கருத்தாங்கினாளாகில், அதே விசுவாசத்தினால் மரியாள், யேசு தன்னுடைய, மெசியாவுக்குரிய பணியின் போது வெளிப்படுத்திய தாய்மையின் மற்றைய பரிமாணத்தைக்கண்டுபிடித்து ஏற்றுக் கொண்டாள். தாய்மையின் இந்தப் பரிமாணம் தொடக்கத்திலிருந்தே, அதாவது தனது திருமகனைக் கருத்தரித்துப் பெற்றெடுத்த கணந்தொட்டே மரியாளுக்குச் சொந்தமாயிருந்தது என்று கூறலாம். அந்த நேரத்திலிருந்து அவள் ''விசுவசித்தவள்'' ஆனாள். ஆனால் தனது திருக்குமாரனது மெசியாவுக்குரிய அலுவல் அவளதுகண்களுக்கும் மனதிற்கும் தெளிவாகத் தெரியவந்தபோது அவள் தானே ஒரு தாய் என்ற முறையில், தாய்மையில் அந்தப் புதிய பரிமாணத்தை கூடிய விதமாக ஏற்கும் நிலையை அடைந்தாள்; இது தன் திருமகனருகில் அவளது ''பங்காக'' அமையவிருந்தது. ஆரம்பத்திலேயே ''இதோ! நான் ஆண்டவருடைய அடிமை உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்'' (லூக் 1:38) என்று அவள் கூறவில்லையா? விசுவாசத்தின் மூலம் மரியாள் அந்த வார்த்தையைத் தொடர்ந்து கேட்டுச் சிந்தித்து வந்தாள். ''அறிவுக் கெட்டாத ஒரு விதத்தில்'' (எபே 3:19) உயிருள்ள கடவுளின் சுயவெளிப்படுத்தல் அதில் மேலும் மேலும் தெளிவாகியது. எனவே, தாய் என்ற முறையில் மரியாள் ஒருவிதத்தில் மகனிடம் முதற் சீடர் ஆனாள். ''என்பின்னே வா'' (அரு 1:43) என அப்போஸ்தவர்களுக்கோ, வேறு எவருக்கோ அழைப்பு விடுக்குமுன் முதன் முதலாக அவர் அவளுக்கே இந்த அழைப்பை விடுத்தது போற் தோன்றுகிறது.

## மரியாள் பணியாளரை நோக்கி ''அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்று கூறுகிறாள்

(அரு. 2: 5)

21. இந்த நோக்கிலே புனித அருளப்பருடைய நற்செய்தி நூலிற் கானாவூர் கலியாண விருந்தில் மரியாளைக் காட்டும் பகுதி அர்த்தம் நிறைந்தது. யேசுவின் பிரசித்த பணியின் ஆரம்பத்தில் அவரது தாய் என்ற முறையில் அவள் அங்கு சமூகமளிக்கின்றாள். ''கலிலேயாவிலுள்ள கானாவூரில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இயேசுவின் தாய் அங்கு இருந்தாள். இயேசுவும் அவருடைய சீடரும் அத்திருமணத்திற்கு அழைக்கப் பெற்றிருந்தனர்'' (அரு 2:1-2). இவ்வாசகத்திலிருந்து மரியாளோடு கூட, இவ் விழாவில் மரியாள் பங்குபற்றிய காரணத்தாலேயே, யேசுவும் அவருடைய சீடர்களும் அழைக்கப்பட்டது போற் தோன்றுகிறது. தாயின் பொருட்டு மகன் அழைக்கப்பட்டது போற் தோன்றுகிறது.

இந்த அழைப்பின் விளைவாக நிகழ்ந்த சம்பவங்களை நாம் அறிவோம் அதாவது. ''யேசு செய்த அருங்குறிகளில் முதலாவது''—தண்ணீரை இரசமாக மாற்றியது — இதனால். யேசு ''தமது மாட்சியை வெளிப்படுத்தினார். அவருடைய சீடர் அவரில் விசுவாசங் கொண்டனர்'' (அரு. 2:11), என்று நற்செய்தியாளர் சொல்லத் தூண்டப்படுகிறார் (அரு 2:11).

கலிலேயாவிலுள்ள கானாவூரில் மரியாள் யேசுவின் தாய் என்ற முறையில் சமூகமாயிருக்கின்றாள். தனது திருக்குமாரன் ''செய்த அருங்குறிகளில் முதலாவது'' அவரது மெசியாவுக்குரிய வல்லமையை வெளிப்படுத்த அவள் குறிப்பிட்ட வகையில் துணை புரிகின்றாள் ''இரசம் தீர்ந்துவிடவே, இயேசுவின் தாய் அவரை நோக்கி'' 'இரசம் தீர்ந்துவிட்டது' என்றாள். அதற்கு யேசு 'அம்மா! அதை ஏன் என்னிடம் கூறுகிறீர்? எனது நேரம் இன்னும் வரவில்லை' (அரு 2:3, 4) எனக் கூறினார் அருளப்பர் நற்செய்தியில் ''நேரம்'' என்பது திருமகன் தமது பணியை நிறைவேற்றி மகிமைப்படுத்தப்படுவதற்கு பிதாவினால் நியமிக்கப்பட்ட நேரமாகும். (அரு 7:30; 8:20; 12:23,27; 13:1; 17:1; 19:17) யேசு தமது தாய்க்குக் கூறிய விடை ஒரு மறுப்புப்போலத் தோன்றினாலும் (அக் கேள்வியைவிட 'எனது நேரம் இன்னும் வரவில்லை' என்ற மொட்டையான வசனத்தை நோக்கும் போது) மரியாள் பணியாளரை நோக்கி ''அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்று கூறுகின்றாள் (அரு 2:5). பின்பு யேசு பணியாளரிடம் கற்சாடிகளில் நீர் நிரப்புமாறு கட்டளையிடுகிறார். தண்ணீர் இரசமாகிறது. திருமண விருந்தினருக்கு முன்பு பரிமாறப்பட்ட இரசத்தைவிட இது சிறந்ததாயிருந்தது.

## மரியாள் ஒரு தாயாக இருந்து மத்தியஸ்தம் செய்கிறாள்

யேசுவுக்கும் அவருடைய தாய்க்குமிடையிலேயிருந்த ஆழ்ந்த புரிந்துணர்வு எத்தகையது? அவர்களது ஆன்மீக ஒன்றிப்பின் மறை பொருளை நாம் எவ்வாறு ஊடுருவிப் பார்க்க முடியும்? ஆனால், இச்சம்பவம் தனக்கே விளக்கம் தருகிறது. மரியாளினது தாய்மையின் புதிய பரிமாணத்தை, புதிய அர்த்தத்தை இச்சம்பவம் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகிறது என்பதில் ஐயமில்லை, யேசுவின் வார்த்தைகளிலும், ஒத்தமை நற்செய்தியாளர் கூறும் பல்வேறு சம்பவங்களிலும் (லூக் 11:27-28; 8:19-21; மத் 12:46-50; மாற்கு 3:31-35) மட்டும் அடங்கியிராத ஒரு தனிச்சிறப்பு அவளது தாய்மையில் உள்ளது. இந்த நூற்பகுதிகளில் எல்லாவற்றுக்கும் மேலாக யேசு கருதுவது என்னவென்றால், பிறப்பின் விளைவாக ஏற்படும் இந்தத் தாய்மை (சகோதரத்துவ

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புறவு நலிவடைகையில்....

எமது நாளாந்த வாழ்விற் பலருடன் உறவுகளை வைத்திருக்கின்றோம். உறவுகள் நட்பின் அடிப்படையில் அமைந்தால் அது நட்புறவு ஆகும் நட்புறவைப் பேணுபவர்கள் நண்பர்களே ஆவர். நாம் பலருடன் தொடர்புகளை மேற்கொண்டாலும் சிலரே நமக்கு நண்பர்களாக மாறுகின்றனர், நாம் சந்திக்கும் அன்பர்கள் நண்பர்களாக மாறுவதற்கும், பகைவர்களாக மாறுவதற்கும் நாமே பொறுப்பானவர்கள். உறவுகளில் முறிவு ஏற்படுவது சகஜம்' ஆனல், அவற்றைச் சீர்ப்படுத்துவதே பொறுப்பு வாய்ந்த செயலாகும்.

முதலில் நமக்கு நாமே நண்பர்களாக மாற வேண்டும். என்னை முதலில் நான் ஏற்றுக் கொள்ளவேண்டும், அப்போது தான் பிறரை ஏற்று நட்புடன் வாழ முடியும் 'நல்ல நண்பர்கள் உனக்கு வேண்டுமாயின் முதலில் நீயே நல்ல நண்பனக இரு" எனத் தற்கால சிந்தனையாளர் ஒருவர் கூறியுள்ளார். எமது விருப்பு வெறுப்புக்களை மற்றவர்கள் புரிந்து வாழ வேண்டுமென வாழாது, மற்றவர்சளின் விருப்பு வெறுப்புக்களை நாம் புரிந்து வாழ வேண்டும்.

எமது நண்பர்களைக் கொண்டே பிறர் எம்மை மதிப்பிடுகின்றார்கள். அதனால் தான் "உன் நண்பன் யார் எனக்கூறு நீ எப்படிப்பட்டவன் என நான் உனக்கு கூறுவேன்" என அறிஞர் ஒருவர் மொழிந்துள்ளார். ஆகவே தீய நட்பை நாடாது நல்ல நட்பின் மூலமே நல்ல அபிமானத்தைப் பெற முடியும் எமது நல்வாழ்விற்கு, முன்னேற்றத்திற்கு நல்ல நண்பர்களே துணை புரிவர், எமது தவறுகளை சுட்டிக் காட்டுபவர்களாகவும், எமது வெற்றிகளில் மகிழ்வடையும் தன்மையுடையவர்களாகவும் இருப்பவர்களே எம்மை உருவாக்கும் நண்பர்களாவர்.

நட்புறவானது ஒரு தலைப் பட்சமானதாக இருக்கக் கூடாது. குறிப்பிட்ட சமுதாயச் சூழலில் வாடுவோர் தமக்கென நண்பர்களைத் தேடுவது தவறல்ல. ஆனல் அவ்வுறவு மற்றவர்களைப் புறக்கணிப்பதாக அமையக் கூடாது. நட்புறவு நலிவடைவதற்கு நண்பர்களிடையே வேற்றுமை பாராட்டுதலும் ஒரு காரணமாகும்.

நண்பர்கள் தமக்குள் சில இரகசியங்களைப் பகிர்ந்து கொள்வர். அவற்றில் சிலவற்றை மறைக்கும்போது பின்னர் நட்பு நலிவடைய வாய்ப்பு உண்டாகின்றது. நண்பர்களைச் சம்பாதிப்பதற்கு நீண்ட நாள் உறவு தேவையில்லை. அவ்வாறே அவர்களைப் புறக்கணிப்பதற்கும் சில நிமிடங்களே போதும். அரிய நட்புக்கள் எமது ஆபத்திற் கை கொடுக்கும் இவ்வுலக வாழ்வில் நாம் பெறக்கூடிய முதன்மைச் செல்வம் நல்ல நட்பே. அப்பேற்பட்ட நட்புறவை நாமே நலிவடையாது பேண வேண்டும்.

முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பன்று. நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும் என்று தெய்வப் புலவனும் தமது பொய்யா மொழியில் மொழிகின்றார்.

"முகநக நட்பது நட்பன்று
நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

கிறிஸ்து நேசரெட்னம் பாவிலு
"தமிழ் நேசன்"

---

இளைஞர் உலகம்,
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை,
15-04-88




அன்பு இளம் உள்ளங்களுக்கு!

எல்லோரும் தேடுவதைப் போற்தான் நானும் உங்களை தேடுகிறேன். எங்கே வாழ்கிறீர்கள். மற்றவர்கள் தேடுவது போல், உங்களைக் காட்டிக் கொடுக்கவோ, தண்டனை தரவோ, தலையாட்டிவிடவோ அல்ல, மாருக மனம் திறந்து பேச உங்கள் திறமைக்கு களம் அமைக்க, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத்தான் அழைக்கின்றேன். வாருங்கள் இளைஞர் உலகிற்கு.

கல்லூரிப் படிப்புடன் கடமை முடிந்தது என சிலர் தூங்குகிறார்கள். பரீட்சைக்கு மட்டும் தான் படிப்பு, வாழ்க்கைக்கு அல்ல எனச் சிலர் தூங்குகிறார்கள். வாலிப வயதை வயோதிப நிலையாய் மாற்றி வீட்டிலிருந்து வீண் வம்பு பேசுகிறார்கள். அவர்களுடன் நீங்களும் இணைந்து விடாது முயற்சியே முன்னேற்றத்தின் வழி என உணர்ந்து செயற்பட வாருங்கள். வீட்டில் வாழும் மிருகங்கள் போல் உணவுக்காக மட்டும் உயிர் வாழாது உங்கள் திறமைக்கு சான்று பகர நேரத்தைப் பொன்னுக்கித், திறமைக்குச் சந்தர்ப்பம் அளித்து முயற்சித்தால் முன்னேற்றம் உண்டு அல்லவா? எதற்கும் நொண்டிச் சாட்டில் நொந்து வாழாது உள்ளத்தைத் திடமாக்கி இளைஞர் உலகிற்கு வழிகாட்ட வாருங்கள்.

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-15

குருசுமுத்தண்ணை: என்ன தம்பி நோட்டிசோட, காத்தாலே

அடைக்கலம்: கறுதாளும் இல்ல. சிவத்தாளும் இல்லை. வேளாங்கண்ணியின் நோட்டிஸ் அண்ணை இந்தாங்கோ.

குருசு: எட தம்பி, இந்த இருபதாம் நூற்றூண்டிலேயும் மூடக்கொள்கையால மிரட்டிப் பார்க்கிறியள். சனத்தின்ர பக்தியை பயப்படுத்தி திசைதிருப்புவதில உங்கட மூடப்பக்தி வாழுதுபார்

அடைக்கலம்: அண்ணே பலிக்காதீங்கோ, இப்படிப் பலிச்சவையளுக்கு எவ்வளவு நஷ்டம் என்று பார்த்தியளோ?

குருசு: என்ராதம்பி லாபநட்டம் பாத்தே கோயிலுக்கு வாறியள். இதுகள் எல்லாம் குருட்டுப் பக்திக் காறற்ற வேலைபார். உலகம் அழியப்போகுது. அதுதான் இது போன்ற குருட்டு ஞானம் வளர்க்கப் பார்க்கிறியள். கடவுளை நம்பிக்கை வளத்தா இந்த மிரட்டல் ஒன்றும் பலிக்காது. அற்பவிசுவாசிக்குத்தான் அங்கலாய்ப்பும் அதிகம். இதில ஏமாத்திற பாவம் உனக்கும்தான் கவனம்.

---

## சிந்தனைச் சிதறல்

* மற்றவர்களின் மனதைக் கவர நீ எடுத்துக் கொள்ளும் முயற்சியின் அளவில் கால் பகுதி. இறைவனின் இதயத்தைக் கவர நீ முயற்சி செய்தால் அது உனக்கு எவ்வளவோ நலமாக இருக்கும்.
* புகழ் என்னும் மலரை உனக்கு யாராவது கொடுத்தால், அதைத் தாழ்ச்சியோடு பெற்று, பெருமையோடு ஆண்டவன் பாதத்திலே வைத்து அவனை அழகு படுத்து.
* இறைவன் என்னும் சூரியனை விட்டு மெல்ல மெல்ல நீ அகன்று சென்றால் உன்னையே நீ கண்டு கொள்ள முடியாத இருளுக்குள் அகப்பட்டு அல்லலுற நேரிடும்.
* ஆண்டவனை நினைத்து அவரைப் பற்றிப் பேசுகின்ற சில மனிதர்கள் அந்த ஆண்டவன் படைத்த மனிதர்களை நினைத்து அவர்களோடு [illegible]

---




### குடும்பச் சிக்கல்களுக்குக் காரணம்

அநேகமான குடும்பங்களில் சிக்கல்கள், சீர்குலைவுகள், தோன்றுவதற்குரிய அடிப்படைக் காரணம் பொருளாதாரப் பிரச்சனையாகும். அதாவது குடும்பச் செலவிற்கு ஏற்பக் குடும்ப வருமானம் போதாமல் இருக்கிறது. அநேகமான குடும்பங்களில், வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பது குடும்பத்தலைவனுக இருக்கின்ற, பொழுதிலும், அந்த வருமானத்தைச் செலவு செய்வது குடும்பத்தலைவியின் கையிலேயே தங்கியுள்ளது. எனவே, இல்லாள் குடும்பவருமானத்தைக் கருத்திற் கொண்டு செலவுகளை மேற்கொள்ள வேண்டும். எமது குடும்ப வருமானத்திற்கு ஏற்பத்தான் நாம் செலவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் என்றும் நினைவில் நிற்கவேண்டும்.

இந்நவநாகரீக உலகம் காலத்திற்கு ஏற்ப நடை உடை பாவனையில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறது. எனவே, மற்றவர்கள் வாங்குகிறார்கள்; உடுத்துகிறார்கள் எனவே, நாமும் அவர்களைப் போல் வாங்க வேண்டும்; உடுத்த வேண்டும் என நினைப்பது தவறு.

விரலுக்கு ஏற்பவே வீக்கம் இருக்க வேண்டும், உதாரணமாக, அடுத்த வீட்டுக் குழந்தையின் பிறந்த தினவிழா ஆடம்பரமாக வீடியோ படப்பிடிப்புகள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. எனவே, எமது குழந்தையின் பிறந்த தினவிழாவும் அவ்வாறே நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கணவனேடு அடம் பிடிக்கக் கூடாது. அதுமட்டுமன்று குழந்தைகளிடமும் தப்பபிப் பிராயத்தை ஏற்படுத்தக்கூடாது.

ஆடம்பரமான வீண் செலவுகளைத் தவிர்த்து அத்தியாவசியமான தேவைகளை முதலில் நிறைவேற்ற வேண்டும். பிள்ளைகளின் உடல் நலனில் அக்கறை கொண்டு, போசாக்கு மிக்க உணவுகளைத் தெரிந்தெடுத்து ஊட்ட வேண்டும். பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்டு, தினமும் அவர்களைக் கவனிக்க வேண்டும். குறிப்பாகக் கூறின் உடல் நலம் மிக்க கல்வியிற் சிறந்த ஒழுக்க சீலர்களாகப் பிள்ளைகளை உருவாக்க வேண்டும்.

இன்னும், குடும்ப வருமானத்தைப் பெருக்கக் கூடிய வழிகளில் இல்லாள் ஈடுபடலாம். வரவு செலவுத் திட்டம் மாதாந்தம் தயாரித்துச் சிக்கனத்தைத் தலை அங்கமாகக் கொண்டு அதற்கேற்ப வரவு செலவை அமைத்து வந்தால் பொருளாதாரப் பிரச்சனையாற் குடும்பங்கள் சீர்குலைய மாட்டா.

யோகேஸ்
யாழ்/பல்கலைக் கழகம்.

### நிறைவாழ்வுக்கு ஒளிவிளக்கு குடும்பம்

ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும், புனிதமாக வாழாவிடின் நெறியான பேரின்ப நிறைவாழ்வு பெற முடியாது. சில குடும்பங்கள் அயலவரைப் பிரிந்து தமக்குள் மாத்திரம் ஒற்றுமையுடன் வாழ முற்படுகிறது. பல குடும்பம் அயல் குடும்பங்களையும் தம்மோடு இணைத்து பாசம் ஊட்டுகிறது.

தமக்கு அயலில் இருக்கும் ஏழைக் குடும்பத்தின் கண்ணீரில் அவர்களைச் சுரண்டி வாழ முற்படுகிறது. பேராசை பிடித்த குடும்பம்.

ஏழைகளை வஞ்சித்துத் திருடிய பணம், எளியவர்களை ஏமாற்றிக் கவர்ந்த பொருள், அறிவற்றவர்களிடம் அபகரித்த செல்வம், எம் குடும்பத்தை என்றொரு நாளாவது பழிதீர்க்கும் எனவும், ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளெனக் குடும்பத்தைச் சிதைக்கும் என ஒவ்வொரு குடும்பமும் உணர வேண்டும். பலதரப்பட்ட அந்தச் செயல்களைப் புரிந்துவிட்டு, நிம்மதியாக குடும்பம் நடத்தலாமா? இடர்பாடுகள் எழத்தான் செய்யும். நாம் ஒருவரொடு ஒருவர் இணைந்து வாழும் போது பிரிவினைகள். கருத்து வேறுபாடுகள், மனநோவுகள், ஏமாற்றம் போன்றன எழத்தான் செய்யும். குடும்பங்கள் பல ஒன்றுபட்டு வாழ வேண்டுமானல் ஒருவருக்கொருவர் செவி மடுத்து, மனத்தாங்கல்களை, மனத்தாழ்வுகளை அகற்றி ஒருவருக்கொருவர் இணைந்து அன்பு செய்து வாழ விரும்பும் போது தான் உண்மையான கிறிஸ்தவ சூழல் உருவாகும்.

செல்வி மேரிமலர் மரியாம்பிள்ளை
இளவாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## ஞான இலக்கிய நூல்கள் (10)

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

### சங்கத் திருவுரையாகமம்

**முன்னுரை:—**

இந்நூலின் தலைப்பு எபிரேய மொழியின் படி "சங்கம், சபை" என்று பொருள்படும். எனவே இது சபைகள் அல்லது திருச்சபையுடன் நெருங்கிய தொடர்புள்ளதாயிருப்பதுடன், தலைவர், போதனையாளர், ஆசிரியர் அங்கத்தவர் போன்றோரையும் உள்ளடக்கியுள்ளது.

இந்நூல் கி. மு. 3ம் நூற்றுண்டில் நாடுகடத்தலின் பின் தொகுக்கப்பட்டபோதிலும் இதன் ஆசிரியர் சலமோன் அரசரே என்று பாரம்பரியங்கள் கூறுகின்றன.

சங்கப்புலவன் மானிட வாழ்வின் குறையையும், நிலையற்ற தன்மையையும் குறை காணும் மனப்பான்மையுடன் போதிக்கின்ற போதிலும், தனது ஆழ்ந்த மத உணர்ச்சியையும் வெளிக்கொணர்கின்றுர்.

"வீணிலும் வீண், எல்லாம் வீண்" என்ற கருத்து நூலின் தொடக்கமும் முடிவுமாயுள்ளது. மானிட வாழ்வின் வெறுமையையும், இறைவனின் பராமரிப்பு மனிதனின் வாழ்வைச் செழுமைப்படுத்துகின்றது என்ற உண்மையையும் ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து வாழவேண்டுமென்பதே நூலாசிரியரின் நோக்கமாகும்.

இந் நூலிலுள்ள 12 அதிகாரங்களும் தரும் படிப்பினைகளை அடுத்த இதழில் அறிவோம்.

## பைபிள் மாமா

வணக்கம் மருமக்களே!

"உண்டி கொடுத்தோர் — உயிர்கொடுத்தோரே" என்ற நல்மொழியை இந்த மூவரும் மறக்கவில்லை! வயிரூரச் சாப்பிட்ட பின் அவர்கள்; மனநிறைவோடு, 'உன் மனைவி சாராள் எங்கே?' என்று ஆபிரகாமைக் கேட்டார்கள்!

அதற்கு ஆபிரகாம், "களைப்போடு அவள் கூடாரத்தின் உள்ளே இருக்கிறுள்" என்றுர். அதற்கு அவர்களில் ஒருவர் நாம் மீண்டும் உங்கள் முன் வருவோம்! நீங்கள் என்றென்றும் நீடூழிகாலம் வாழ்வீர்கள்! வாழ்வது மட்டுமல்ல! வாழ்வில் எந்தக் குறையும் உங்களுக்கு இனி இராது! அதாவது "யாழ்—இனிது—குழல் இனிது என்பர்—தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்றபடி உலகில் மேலான செல்வமாகிய குழந்தைச் செல்வத்தையும் நீங்கள் கொண்டிருப்பீர்கள்!"

அடுத்த வருடம் இதே நாளில் நாம் இவ்விடம் வரும் போது நீயும் உயிரோடு இருப்பாய்! சாராளுக்கும் ஒரு மகன் இருப்பான்! என்று ஆசீர்வதித்தார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சாராளுக்குச் சரியான வெட்கமும் அவநம்பிக்கையும் உண்டாயிற்று! எனவே கோடிப் பக்கம் போய் நின்று சத்தம் போட்டுச் சிரித்தாள்! சிரித்தது மட்டுமில்லை, தனக்குள்ளே சொன்னுள்.

"நானும் கிழவி—என்னுடைய அவரும் கிழவர் எங்களுக்காவது -இனி பிள்ளை பிறக்க முடியுமாவது?" என்று தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டாள்.

இந்த முணுமுணுப்பைக் கேட்ட தூதருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. உடனே என் வார்த்தையை நம்பாத உன் மனைவி சிரிக்கிறுளே?என்று ஆபிரகாமுக்குக் கூறுகிறுர்.

பயந்திட்டாள் சாராள்! தனக்கென்ன தண்டனை கிடைக்குமோ? என்று அங்கலாய்த்து, "இல்லை நான் சிரிக்கவில்லை" என்று மழுப்புகிறுள். உடனே தூதன் "இல்லை நீ சிரித்தாய்" என்று கூறிவிட்டு மனதுக்குள்ளே அவள் மீது இரங்கி-

"எண்ணறக் சற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின் புத்தி தானே" என்று எண்ணி அவளின் மழுப்பலை பெரிது படுத்தாமற் போய் விட்டார்கள்.

தொடர்ந்து தூதர்களின் பயணம் எங்கே போய் முடிந்தது? சொல்லத்தானே போகிறேன்.

அன்புடன் பைபிள் மாமா.

---

அறிந்துகொள்ளுங்கள் 32

### யாத்திராகாமம்

"யாத்திரை" என்றுல் அதன் பொருள் நமக்குத் தெரிந்ததே. திருத்தலங்களுக்கு செல்லும் பயணத்தை திருயாத்திரை என்று நாம் சொல்லுகிறோம். இஸ்ராயேல் மக்களின்விடுதலைப் பயணத்தை யாத்திரையாகமம் விளக்குகிறது. சட்டநூலின் 2 ம் புத்தகம் யாத்திரையாகமம். எபிரேய மொழியில் இந்நூலுக்கு "இவை பெயர்கள்" என்று கூறப்படுகிறது. எழுபதின்மர் மொழிப்பெயர்ப்பிலும், இலத்தீனிலும் 'எக்சோடஸ்' "Exodos" என்று பொருள்படக்கூறப்படுகிறது. அதே பொருள் கொண்டு ஆங்கிலத்திலும் Exodos என்று கூறுகின்றனர். இதற்கு "வழியிலே" "வெளியேற்றம்" "புறப்படல்" என்று பொருள் கொள்ளலாம். இதன் அடிப்படையில்தான் தமிழில் இந்நூலை யாத்திரையாகமம் என்று அழைக்கின்றனர்.

இறைவனுல் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல்மக்கள் எகிப்திலிருந்து விடுதலை அடைந்து வெளியேறிய நிகழ்ச்சிகளையும், இறைவனுல் கொடுக்கப்பட்ட கானுன் நாட்டை நோக்கிப்பயணம் செய்வதையும் இந்நூல் விவரிக்கின்றது.

பழைய ஏற்பாட்டின் மையமாகப் பயணநூல் விளங்குகிறது. ஏனெனில் இஸ்ராயேல் மக்களின் விடுதலைப்பயணம் அவர்களுக்கு மிகமுக்கிய நிகழ்ச்சியாகும். அந்த நாற்பது ஆண்டு காலத்தில்தான் அவர்கள் யாவே உண்மையான இறைவன் என்றும் அவர்களைக் காப்பாற்றவல்லவர் என்றும் உணர்ந்தனர். இக்காலம் இஸ்ராயேல் மக்களுக்கு யாவே மேல் உண்மையான விசுவாசத்தை அளித்தது. நாடு சென்று குடியேறியபின் அவர்கள் விசுவாசமில்லாதவர்களாய் வாழ்ந்தபோது இறைவாக்கினர் ஆறைவனைப்பற்றி எடுத்துக்கூற இந்நூல் உதவியது

இந்நூலை மோயீசன் எழுதினுர் என்று யாவரும் ஏற்றுவந்தனர். கி. பி. (6-ம் நூற்றுண்டில் "ஆந்ரே மாசியுசு" என்ற சட்டவல்லுனர் மோயீசனைச் சாராத வாசகங்கள் இந்நூலில் உள்ளதாகக்கூறினுர். இவ்வாராய்ச்சி தொடர்ந்து நடந்தது. இந்நூல் பல பாரம்பரியங்களின் கலப்பு என்று காட்டியது. யாவ்வ, குரு, ஏலோயீம் பாரம்பரியப்பகுதிகள் இந்நூலில் உள்ளன.

யாத்திரையாகமத்தை விளங்கிக்கொள்ள இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கைமுறைகளை நாம் அறியவேண்டும். அவர்களின் உணர்வை நாமும் பெறவேண்டும். யாத்திரை ஆகமத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

யாத்திரையாகமம் அனைவரும் படித்துப்பயன்பெறவேண்டியநூல். இறைவனை அறிவிக்கும், மீட்பின் வழியைக் காட்டும் நூல்.

இ. ம. ஜெயசீலன்.

---




மடல்: 5

> நாம் பலராயினும் ஒரே உடலாய் உள்ளோம்
> ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே
> அப்பத்தில்தான் பங்கு பெறுகிறோம்.
>
> புனித சின்னப்பர்

அன்புக் கண்மணகாள்!

கருணை நாதர் நம் யேசுவின் ஆசிகள் என்றும் உம்முள் இருப்பதாக.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் எங்களுக்காக உண்டாக்கப்பட்ட

உயிருள்ள உணவை;
ஊட்டமுள்ள உணவை;
ஒற்றுமையின் உணவை நாம்

நாளும் பொழுதும் கண்களாற் காண்கிறோம், உண்டும் வருகிறோம்.

திவ்விய நற்கருணையைக் காணும் பொழுதும், உண்ணும் பொழுதும் எங்கள் உள்ளத்து உணர்வு எப்படி இருக்க வேண்டுமெனபதைச் சிறிது மௌனமாகச் சிந்தித்துப் பாருங்கள். வஞ்ஞானத்தின் விந்தையில் மூழ்கியிருக்கும் இவ்வுலகு அழிவுப்பாதையிற் செல்வதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றுல்,

விந்தையிலும் விந்தையாகிய விஞ்ஞானத்தாலும் விளக்கம் தரமுடியாத, விளங்கிக்கொள்ள முடியாத வெள்ளையப்பத்தினுல், தியாகத்தின் வடிவான அப்பத்தினுல் ஆகும் என்பதை உங்கள் உள்ளம் உணரவேண்டும். அந்த உணர்வோடு பின்வரும் வார்த்தைகளைக் கூறுங்கள்.

பகைமை போக்கிடும்—நற்கருணை நாதரே
தியாகத்தை ஊட்டிடும்— நற்கருணை நாதரே
அன்பை வளர்த்திடும்—நற்கருணை நாதரே
தாழ்மையைத் தந்திடும்—நற்கருணை நாதரே

எங்கள் நாட்டின் அனைத்து மக்களையும் உம் அன்புக்கரத்தால் ஆசீர்வதித்து அணைத்துக்கொள்ளும் ஆமென்.

மீண்டும் சந்திக்க அருள்நாதர் ஆசிவேண்டி விடை பெறும்.

அன்பின்
அன்பு விழி

### அங்கத்துவப் பதிவு

| அங். எண் | பெயர் | ஆண்டு | பாடசாலை |
|---|---|---|---|
| 47 | செ. தர்ஷிக்கா | 11 | மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| 48 | ஞா. மேரி மாலதி | 10 | புங்கங்குளம் ம. வி. |
| 49 | டிமன் ஜோசப் ராஜன் | 11 | புனித சவேரியார் ம. ம. வி. மன்னுர். |
| 50 | M.டொன்பொஸ்கோபீரிஸ் | 11 | ,, ,, |
| 51 | J. ஜீவக்குமார் | 11 | ,, ,, |
| 52 | ஆ. மேரி அனற்ரி | 6 | இராமநாதபுரம் இ. ம. வி கிளிநொச்சி. |

அங்கத்துவ விண்ணப்பங்களை அனுப்ப மறவாதீர். ஒரு உறையில் பல விண்ணப்பங்கள் அனுப்பலாம்.

* * *

### உணர்வைத் தொட்ட கவிதை

#### உத்தமர் உயிர்த்தார்

"மன்பதை நோய் கண்டிரங்கி இறந்து மரித்தெழுந்தாய்
பொன்னுரு வில்லையேல் புந்தியில் என்ன பொலித்திடுமே
வாளேந்திப் போர் புரிந்த வாகையரும் மாண்டுவிட்டார்
வாளேந்தாக் கிறிஸ்துவே நீ மரித்தெழுந்தாய் வீரவள்ளல்
"மரித்தும் எழுந்த சத்தியமே
மரணம் இன்மையின் தத்துவமே"

திரு. வி. க.
உணர்ந்தவர்: சின்னப்பர்.

**கணிதம்:** கணித ஆவலர்களே!

பாடத்திட்டத்திற்கேற்பவே இப்பகுதியில் பெற்றோர், பெரியோர், காவலன் கண்மணிகள் பயன்பெற எழுதி வருகின்றேன். தரப்பட்டுள்ள இடவசதிக்கேற்பவே எழுதி வருகின்றேன். விளக்கங்கள் தேவைப்படும் பகுதிகளைக் குறித்து அனுப்பினுல் கணிதப் பகுதியை விரைந்து எழுத உதவியாக இருக்கும்.

அன்பின்
அன்புவிழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதிச் செபியுங்கள் போட்டி—14

"போரை நிறுத்தும் முயற்சி வெற்றிகாண" வேண்டும் என்று ஒரு செபம் எழுதி அனுப்புங்கள். தபால் அட்டையில் தெளிவாக எழுதி 1-5-88 க்கு முன் பாதுகாவலன், தபாற் பெட்டி இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த செபத்துக்குப் பரிசு ரூபா 15/=

அடுத்த போட்டியும், பரிசுபெறுபவர் பெயரும் 12-5-88 அன்று பாதுகாவலனில் வெளிவரும்.

### பரிசுபெறும் செபம்

அன்பின் இறைமகனுகிய யேசுவே! எமது இதயங்களை உமது பரிபூரண அன்பினுல் நிரப்பி எங்கு பகையுள்ளதோ அங்கு அன்பையும் எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பையும் எங்கு துன்பமுள்ளதோ அங்கு மெய்யான சமாதானத்தையும் பரப்ப அருள் தாரும்.

ஆண்டவராகிய யேசுவே, அன்பு, இரக்கம், கருணை, அயலாரின் நலன் ஆகிய பண்புகளால் உம் மக்களாகிய எம்மை நிரப்பி மக்கள் யாவரின் சம உரிமை, முழுமையாக ஏற்றுக் கொள்ளும் இதயம் எமக்கு இருந்தால் மட்டுமே எங்கள் நாட்டில் நிலையான, உண்மையான சமாதானத்தையும், இறைமை, ஐக்கியம், ஒருமைப்பாடு என்பவற்றையும் ஏற்படுத்த முடியுமென்ற உண்மையை நாங்கள் உணரச் செய்தருளும். கொடுமை, சுய நலம், அதிகாரவாஞ்சை என்பவற்றை எங்கள் உள்ளங்களில் இருந்து அகற்றி நிலையான, உண்மையான சமாதானத்தை உருவாக்கவும் சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த ஒரு ஈழத்தாயகத்தைக் கட்டியெழுப்பவும் உமது உதவியை வேண்டுகிறோம். பிதாவோடும் தூய ஆவியோடும் என்றும் ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய யேசுவே உமது நாமத்தின் பெயரால் வேண்டுகிறோம். ஆமென்.

பரிசு பெறும் நற்பேறுளர்:- மா. ஜெறி
சென் தோமஸ் வீதி,
மாதகல்.

பாராட்டுப் பெறுவோர்;-

சூ. அந்தோனிப்பிள்ளை, பலாலி வடக்கு.
ஜே. கே. பிரான்சிஸ் 18A, கோவில்வீதி, யாழ்ப்பாணம்.
அருள் டெல்மா, 2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.
தி. சூசைநாதன், மொன்டேபானே, அம்பிட்டிய.
ஆரோக்கியநாதர் இராஜேஸ்வரி, மாபோல, வத்தளை.
பிரான்சிஸ் எமில்டா, சவேரியார்வீதி, மல்லாகம்.
ம. மேரிமலர் மரியாம்பிள்ளை, சென்ஜேம்ஸ், இளவாலை.
ச. பற்றிக் குணசீலன், சென்ஜேம்ஸ் இளவாலை
திருச்செல்வம், செபஸ்ரியன் லேன், சில்லாலை.
ஞா. வேதநாயகம் பலாலி, வசாவிளான்
ஞானரட்டினம் 10ஆம் வட்டாரம், புங்குடுதீவு
செபமாலை சந்திரா, மணற்குளம், உயிலங்குளம்
ஜெனஸ்ரா அந்தோனிப்பிள்ளை, நாரந்தனை
வென்சஸ்லாஸ், ஆஸ்பத்திரிவீதி, மன்னர்

## எம் கருத்துக் குறள் தெளிவுரை

நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்யவேண்டும.

## 31-வது நினைவு தினம்



திரு. பிலிப்புப்பிள்ளை
சந்தான்பிள்ளை

மலர்வு: 14-11-1916
உதிர்வு: 13-03-1988

அன்னரது ஆன்ம சாந்திக்காக 18-04-88 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நாரைட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், சகோதரி, மருமகன், பேரப்பிள்ளைகள், உறவினர்.

கங்காணிதீவு,
நாரைட்டான்.

A/17.

## மீட்பரின்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

மும் கூட) இறைவன் நம் தந்தை என்னும் மீட்புவட்டத்தினுள் இறையரசின் பரிமாணத்தில் எப்படியிருக்கும் என்பதனேடு ஒப்பீடு செய்வதேயாகும். அருளப்பரின் வாசகத்திலோவெனில் கானவூர் சம்பவத்தின் வர்ணனை உடலைச் சார்ந்த உறவின்படியான தாய்மையை மட்டுமல்ல, ஆவியைச் சார்ந்த உறவின் படியான ஒரு புது விதமான தாய்மையும் வெளிப்படையாகக் காட்டப் படுகிறது, அதாவது, மனிதப் பிறவிகள் மட்டில் மரியாளுக்குள்ள கரிசனை, அவர்களது பல்வேறுபட்ட தேவைகளில் அவர்களுக்குதவ முன்வருதல் ஆகியவற்றை இது கோடிட்டுக் காட்டுகிறது. கலிலேய ஊராகிய கானவில் ஒரேயொரு மனித தேவையின் புலப்படக்கூடிய அம்சம் காட்டப்பட்டுள்ளது, அதுவும் முக்கியத்துவமற்ற, அற்பமான ஒன்றுகத் தோன்றுகிறது: ("இரசம் தீர்ந்துவிட்டது").

### 4ஆம் வருட நினைவஞ்சலி



யுஸ்ரெலா ஜஸ்மின்
கிறிஸ்ரியன்

தோற்றம்: 26-09-1956
மறைவ: 22-04-1984

பாவிகளை மீட்க மனிதவுரு எடுத்த எங்கள் இனிய நல்ல யேசுவே, ஈர்பதினன்கு வருடங்கள் எம்முடன் வாழ்ந்து திடீரென மறைந்த எம் அன்புச் செல்வத்திற்கு ஆன்ம இளைப்பாற்றியை அளித்தருள வேண்டுமென்று உம்மை அன்புடன் இறைஞ்சுகின்றோம். அவவின் ஆன்மா நித்திய பேரின்ப வாழ்வு பெற, அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் 22-04-1988 பி. ப. 4-30 மணிக்கும், கிளிநொச்சி புனித ஆரோகணமாதா ஆலயத்தில் 22-04-1988 பி. ப. 5-30 மணிக்கும், யெயந்திநகர் கிளி. புனித அந்தோனியார் ஆலயத்தில் 23-04-88 பி. ப. 4-30 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிகளில் பங்குபற்றுமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன், பாசமகள், பெற்றோர், சகோதரர்கள், மாமி, மைத்துனர், உறவினர், நண்பர்கள்.

ஜஸ்மின் இல்லம்
இல. 29 யெயந்திநகர்,
கிளிநொச்சி.

A/18.

## அரியாலை புனித யூதாததேயு ஆலயம் திருவிழா நிகழ்ச்சி

21-4-88 மாலை 5. 15 க்கு ஆராதனையும் திருப்பலியும்.
22-4-88 மாலை 5. 15 க்கு ஆராதனையும் திருப்பலியும்.
23-4-88 மாலை 5. 15 க்கு ஆராதனையும், திருப்பலியும் நற்கருணை ஆராதனையும்
24-4-88 காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி.
மாலை 5 மணிக்கு திருப்பலி. A/16

## போட்டியில் முதற்......

(3ஆம் பக்கத்தொடர்ச்சி)

னரை இது கூடியஅளவு பாதித்துள்ளது. தயமைக் கிறிஸ்தவ சபைகள் என பறைசாற்றிக் கொண்டு பல பிரிவினைச் சகோதரர்கள் உண்மை விசுவாசிகளை தம்பக்கம் கவரப்பார்க்கின்றனர். நாஸ்தீகக் கொள்கைகளை விரட்டியடித்து, பிரிவினைவாதிகளை பிரித்தறிந்து தமது உண்மைவிசுவாச விளக்கை எந்த மழையானுலும், சூருவளியானுலும் உயர்த்திப்பிடிக்க வேண்டும். அவ்வாருயின் பொதுநிலையின்வாழ்விலேகிறிஸ்தவத்தின் விழுமியங்கள் கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இன்றைய எம் சமூகத்திலே ஏழை-பணக்காரர், கற்றவர்-கல்லாதவர் இளையோர்-முதியோர் ஆகிய பல வகைப்பட்ட வகுப்பினர் காணப்படுகின்றனர். இந்நிலையில் சமத்துவமும் சகோதரத்துவமும் பொதுநிலையினரிடையே நிலைநிறுத்தப்பட வேண்டும். சாதி என்னும் பேதி இன்றும் எம் வீதிகளில் வலம் வரத்தான் செய்கின்றது. எம் மத்தியில் அனைவரையும் அன்பு செய்யும் உயர் மதிப்பீடு அவசியமானது. ''ஓடும் உதிரத்தில் வடிந்தொழுகும் கண்ணீரில் தேடிப்பார்த்தாலும் சாதிதெரிவதுண்டோ அப்பா?'' எனக் கேட்கும் கவிமணியின் கேள்விக் கணையை பொதுநிலையினராகிய நாம் எம் உள்ளத்தில் இருத்தவேண்டும்.

ஆகவே, பரந்த நோக்கில் திறந்த மனத்துடன் பொதுநிலையினரின் வாழ்வை ஆராய்ந்து பார்த்தால் அங்கே கிறிஸ்தவ மதிப்பீட்டின்படி வாழ்வுமுறை அமைந்துள்ளதா என்பதல்ல முக்கிய விடயம். ஆனுல் பொதுநிலையினரின் எதிர்கால வாழ்வு எழுச்சிபெற்று திகழ வேண்டும் என்பதே அன்னை திருச்சபையின் பேரவா. மன்னித்தல், விட்டுக்கொடுத்தல், ஏற்றுக்கொள்ளுதல், அன்பு, தியாகம், அமைதி, சமாதானம் சமத்துவம் ஆகிய கிறிஸ்தவ மதிப்பீடுகளில் பொதுநிலையினர் தம்வாழ்வை அடித்தளமிட்டுக் கட்டி எழுப்பவேண்டும். நம் அழைப்பின் மேன்மையை உணர்ந்து செயலாற்ற வேண்டும். தேவையற்ற சடங்கு, சம்பிரதாயங்களைத் தூக்கியெறிந்துவிட்டுக் காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப, கிறிஸ்துவின் போதனைகளுக்கு, எம் இலட்சிய வாழ்வினுல் உருக்கொடுப்போம்.

### 1ஆம் வருட நினைவஞ்சலி



அருளம்மா செபநாயகம்
மண்ணுலகில்: 10-12-1935
விண்ணுலகில்: 30-3-1987

இரக்கம் மிகுந்த இறைவா, நீரே இவ்வுலகில் சகலமுமாயிருந்து எல்லாவற்றையும் நடப்பிக்கின்றீர். இவ்வுலகில் வாழ்ந்து உமது சித்தப்படி மரித்த உமது அடியாள் அருளம்மா செபநாயகத்திற்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

கணவன், பிள்ளைகள்
நவாலி. A/16.

### 11வது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி மதலேனு (இராசப்) அல்பேட்
20-04-1988

எம்மை ஈன்ற நற்றுயே,
எம்மிதயம் உன் இதயம்
செம்மையாய் வளர்த்தாயே
செபபரிதியாய் நின்று
நம்மையெல்லாம் அணைத்து நீ
நாளெல்லாம் காத்தாயே
அம்மலரோன் அமரனைத்தான்
அடைக்கலமாய்ச் சேர்ந்தாயே

இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 20-04-1988 காலை 6 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் துக்கப்பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

அல்பேட், பிள்ளைகள்

A/20.

### 6-வது மாத நினைவு தினம்



அமரர் ஜோர்ஜ் வில்பிறட்
அலெக்சான்டர்

சாந்தியான மலர்வு: 28-04-1915
சடுதியான உதிர்வு: 19-10-1987

எம்மை அன்பிலும் பண்பிலும் வளர்த்து இலைமறைகாய் என வாழ்ந்த எம் அன்புச் செம்மலின் எதிர்பாராத பிரிவினுல் துயருறுகிறோம்.

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் 19-04-88 காலை 6 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் அன்பர்கள், நண்பர்கள், உறவினர்களின் மன்றுட்டுக்களை எதிர்பார்க்கும்,

மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்கள்
118, 4ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். A/19



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# வறியோருக்கு இந்தோனேசிய திருச்சபையின் பணி

இந்தோனேசியத் திருச்சபை சுகாதாரப்பணிகளை தொடர்ந்து நடத்தும். ஆனல் பெரிய பெரிய நகரங்களிலல்லாது கிராமப்புறங்களிலுள்ள வறிய மக்களுக்கு இப்பணி செய்யப்படவேண்டுமெனக் கத்தோலிக்க வைத்திய நிலையங்களின் இயக்குநர்கள் தீர்மானித்துள்ளனர். இத்தீர்மானம் கத்தோலிக்க சுகாதாரச்சேவைச் சங்கத்தின் மத்திய குழு பெப்ரவரி 26 - 28 ம் திகதிகளில் ஒன்றுகூடியபோது எடுக்கப்பட்டது.

ஜகார்த்தா நகர்ப் பேராயர் லியோ சொக்கோட்டோ கத்தோலிக்க வைத்திய நிலையங்கள் விசுவாசத்தைப் பரப்பும் வழிகளாகச் செயற்படவேண்டுமா என்ற கேள்வியை எழுப்பினர். ''பெரும்பாலான ஊழியர்கள் பிறமதத்தினராக இருக்கும் கத்தோலிக்க வைத்திய நிலையங்களில் சமயநோக்கோடு செயற்படுவது கடினமானது. ஆகையால் கத்தோலிக்க ஊழியர்கள் ஒரு நிறுவனமாக அன்றி தனிப்பட்டவிதத்தில் அப்போஸ்தல பணிபுரிவது மற்றொரு வழியாகும்.

பிற வைத்திய சாலைகளில் ஊழியம்செய்யும் ஒரு கத்தோலிக்கர் தனது சமயத்தின் பொருட்டன்றி தனது தொழிற்திறமை, நல்லொழுக்கம் ஆகியவற்றுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டால் பிறர் அவரை ஒரு அச்சுறுத்தலாகக் கருதமாட்டார்கள். ''என்று கூறிய அவர் கத்தோலிக்கர் என்ற காரணத்தினல் சிலர் அவர்களை வேலைக்கமர்த்தாமல் விடவும் கூடும் என்பதையும், விசுவாசத்தில் உறுதியற்ற கத்தோலிக்கர்கள் விசுவாசப் பரப்புதலைப்பற்றிக் கரிசனை கொள்ளமாட்டார்கள் என்பதையும் ஒப்புக்கொண்டார்.

ஆனல் கத்தோலிக்க வைத்திய சாலைகள் இன்னும் தேவைப்படின் திருச்சபை அவற்றில் முன்னேற்றங்கள் செய்து, அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்கவும் முயலும் என ஆயர் உறுதிகூறினர்.

# திருச்சபை அச்சுச் சாதனத்தைப் பயன்படுத்த வேண்டும்

(பாகிஸ்தானின் கத்தோலிக்க நகேப்பின் முன்னள் ஆசிரியரும் தற்போது மணிலாவில் கல்விகற்று வருபவருமாகிய பிதா இனயத் பேர்னுட் மார்ச் 12ம் திகதி ஏசியா போக்கஸ் என்னும் வெளியீட்டில் எழுதிய கட்டுரையிலிருந்து பின்வரும் பகுதிகள் எடுக்கப்பட்டன.)

பாகிஸ்தான் 96 வீத முஸ்லிம்களைக்கொண்ட ஓர் இஸ்லாமிய நாடு. அங்குள்ள பிற மக்களில் 2 வீதமானேர் இந்துக்கள், 2 வீதமானேர் கிறிஸ்தவர். அங்குள்ள திருச்சபை மாநாடுகள், கருத்தரங்குகள், தொடர்புச்சாதனங்களின் வழியாக நற்செய்தி பரப்ப முயல்கின்றது.

அந்நாட்டு அரசியல் யாப்பின்படி அங்குள்ள சகல இனத்தவர்க்கும் தமது மதத்தை அனுசரிக்கவும், நிறுவனங்களை ஏற்படுத்தவும் உரிமை உண்டு. ஆனல் 1972 ல் இதற்கு மாறாகக் கத்தோலிக்க பாடசாலைகளும் கல்லூரிகளும் தேசியமயமாக்கப்பட்டன.

பாகிஸ்தான் தொலைக்காட்சியிலும், வானெலியிலும் ஒரு வருடத்துக்கு மூன்று மணித்தியாலங்களே கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. அதாவது நத்தார், பெரியவெள்ளி, உயிர்த்த ஞாயிறு ஒவ்வொன்றுக்கும் ஒரு மணித்தியாலம். கத்தோலிக்க ஆயர் பேரவை கூடுதலான நேரத்தைப்பெற பெரு முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லை.

ஆனல் சென்ற வருடம் பாகிஸ்தான் தேசியத்தினத்தன்று ரேடியோ வெரிற்றஸ் உருதுமொழியில் ஒரு சேவையை ஆரம்பித்துள்ளது. இது பாகிஸ்தானுக்கு மட்டுமல்லாது, இந்தியா, பங்களதேஷ் ஆகிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும் பலனளிக்கும். இந்த விசேட பணிக்காக இரு இளைஞர் மணிலாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன் பாகிஸ்தானிலிருந்து இதற்காக ஒலிப்பதிவு நாடாக்களும் தயாரித்து அனுப்பப்படுகின்றன.

25 வீதத்திலும் குறைந்தோரே கல்வியறிவு பெற்றுள்ள பாகிஸ்தானில் தொலைக்காட்சியையும் வானெலியையுமே மக்கள் விரும்புகின்றனர். தினசரிப்பத்திரிகைளை வாங்க அவர்களுக்குப் பொருளாதார வசதியில்லை. கத்தோலிக்க பத்திரிகைகளும் அதிகமாக வாசிக்கப்படுவதில்லை.

பாகிஸ்தானில் இரு கத்தோலிக்க பத்திரிகைகளுண்டு, ஒன்று ஆங்கிலத்திலும், மற்றது உருதுமொழியிலும் வெளி வருகின்றன.

கத்தோலிக்க எழுத்தாளர் சில சமயம் பிற பத்திரிகைகளுக்கு எழுதுவதுண்டு. ஆனல் அவர்களுக்கு அதிக வாய்ப்பளிக்கப்படுவதில்லை

1983 ல் கத்தோலிக்க இலக்கிய சபையின் தலைவராக இருந்த பைசலாபாத் ஆயர் ஜோண் ஜோசவ் தேசியக் கத்தோலிக்க இலக்கியச் சங்கமொன்றை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டார். இது 1987 ல் நிறுவப்பட்டது. இது கத்தோலிக்க எழுத்தாளருக்கு எழுதவும் பயிற்சி பெறவும் துணைபுரியும் என நம்பப்படுகிறது.

திருச்சபை அதிகாரிகள் இதில் கூடிய கரிசனை எடுத்து பொதுநிலையினருக்குக் கூடிய பொறுப்புகள் அளிக்கப்பட்டால் நிலைமை இன்னும் சீர்திருந்த இடமுண்டு.




ஏப்ரல் 21,

புனித ஆன்செல்ம்
ஆயர் - மறைவல்லுநர்
(1033—1109)

இத்தாலி நாட்டில் அயோஸ்தா என்னுமிடத்தில் 1033ஆம் ஆண்டு பிறந்தார். தாயாரால் நல்வழியில் வளர்க்கப்பட்ட இவர், புனித ஆசீர்வாதப்பர் துறவற சபையிற் சேர்ந்து உத்தம தனத்தில் முன்னேறிச் சென்றார். கான்டர்பரி ஆயராகத் தேர்ந்து கொள்ளப் பெற்றபின், திருச்சபையின் சுதந்திரத்திற்காகப் போராடினர். இதன் விளைவால் அரசனல் நாடு கடத்தப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டு புனிதராக மரித்தார். திருச்சபையின் ஞான அதிகாரிகளை நேர்மையற்ற விதத்தில் விரோதிக்கிறவன் கடவுளை விரோதிக்கிறுன் என்பதை உணர்ந்து வாழ்வோமாக.

ஏப்ரல் 23,

புனித ஜார்ஜ்
வேதசாட்சி

பலஸ்தீனவில் விட்டா என்ற இடத்தில் கொன்ஸ்டன்டைன் அரசன் காலத்திற்கு முன்னர் வேதசாட்சியாக மரித்தார். இவரைப்பற்றிப் பல கதைகள் இருக்கிறது. இவர் முதலில் ஒரு படையில் இருந்து பின்னர்கிறிஸ்துவின் படையில் சேர்ந்துகொண்டார். தீமையின் இருப்பிடமாகிய அலகையை வெற்றிகொள்ளப் பாடுபட்டது மல்லாமல் தமது தோழர்களையும் அலகையை எதிர்த்துப் போராட ஊக்குவித்தார். இறுதிவரை விசுவாசத்திற்காகப் போராடி வேதசாட்சியாக மரித்தார்.

# யேசுசபை அறிஞர் காந்திக்கும் யேசுவுக்கும் ஒற்றுமை காண்கிறர்

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த பிதா இக்நேஷியஸ் யேசுதாசன் என்னும் யேசுசபைக் குருவானவர் தாம் எழுதிய ''காந்திய விடுதலை இறையியல்'' எனும் நூலில் இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவரான காந்தியை மற்றொரு கிறிஸ்து என வர்ணிக்கிறர். காந்தியின் சுயராச்சியம், அகிம்சை, சத்தியாக்கிரகம் ஆகிய கருத்துகளுக்கு இந்நூல் ஒரு இறையியல் - அரசியல் பரிமாணம் கொடுக்கின்றது. அவரது சத்தியமும் அகிம்சையும் விடுதலைக்கும் இறையுணர்வுக்கும் வழியாகும் . எனவும் இந்நூல் கூறுகின்றது.

பிதா யேசுதாசன் காந்தியின் அரசியல் சிந்தனை அவரது சமயக்கொள்கைக்குப் புறம்பானதல்ல என்றும் விடுதலையும் சுயராச்சியமும் மனிதன் இறைவனை சமுதாயத்திற் சந்தித்து வரலாற்றில் இறையரசைப் புலனீடாகக் காண்பதே என்றும் கூறுகின்றார்.

சகல மக்களினதும் அடிப்படை ஒருமைப்பாடுபற்றிய காந்தியின் கருத்தும், புனித சின்னப்பரும், டெயிலாட்காடினும் கிறிஸ்துவில் கண்ட ஒருமைப்பாடும் ஒத்திருப்பதாகப் பிதா யேசுதாசன் குறிப்பிடுகிறர்.

திருச்சிராப்பள்ளி புனித சூசையப்பர் கல்லூரியைச் சேர்ந்த பிதா யேசுதாசன் மாணவர்களைக் கிராமிய வாழ்வில் ஈடுபடுத்தும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளார்.

## பாடசாலைகளுக்கு அனுமதி

இந்தியாவிலுள்ள மத்தியப் பிரதேசத்தில் கத்தோலிக்க பாடசாலைகளுக்கு அனுமதி பெறுவது ஒரு லஞ்சமாக பல அதிகாரிகளால் கருதப்படுகிறது. கத்தோலிக்க பாடசாலைகளுக்கு ஏதாவது அரசாங்க உதவி தேவைப்படுகையில் அரசாங்க அதிகாரிகள் தமது குடும்ப அங்கத்தினர்களுக்குப் பாடசாலை அனுமதி அளிக்கப்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். இதற்கு மறுத்தால் அப்பாடசாலைகளுக்கு பல இடர்ப்பாடுகள் நேர்வதாக றைகார் மறைமாவட்டத்திலுள்ள 150 கத்தோலிக்கப்பாடசாலை அதிபர்களும் கூறுகின்றனர்.

அரச உதவிபெறும் பாடசாலைகளில் ஆசிரியரின் சம்பளம் தாமதப்படுதல், பாடசாலைகளுக்குக் கிடைக்கும் வசதிகள் தடைப்படுதல் பாடசாலை அதிகாரிகளுக்கெதிராக குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்படுதல் போன்றன இவ்விடர்ப்பாடுகளுட் சிலவாகும். அதிபர்கள் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானித்துள்ளனர்.

## சமய சமர...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

யுதவும் நிறுவனமான மிஸியோவின் பொதுச்செயலாளர் டாக்டர் அலோய்ஸ் புஷ் கூறியுள்ளார்.

டாக்டர் புஷ், பிதா லூஷியன் ஸ்மிற்றுடன் மிஸியோவிடமிருந்து நிதியுதவிபெறும் பல்வேறு திட்டங்களைப் பார்வையிட வந்திருந்தார். இந்தியாவில் பல்வேறு சமயத்தவர் ஒருவர் ஒருவருடைய சமயத்தையும் பழக்கவழக்கங்களையும் மதித்து ஒற்றுமையாக வாழ்ந்து வருவதைப் பாராட்டிய டாக்டர் புஷ், மேற்கு நாடுகளில் சமயத்தின் மட்டில் மக்கள் அசட்டையாயிருப்பதாகவும் 50 வீதமானேர் எச்சமயத்திற்கும் சேராதவர் என்றும் குறிப்பிட்டார்

1932 ல் ஒரு பொதுநிலையினரால் நிறுவப்பட்ட மிஸியோ தற்போது தன்னிடம் உதவி பெறுவோரை சுதந்திரமான, தனித் திருச்சபைகளாகவே மதித்து, அபிவிருத்தியில் அவர்களைப் பங்காளர்களாகக் கருதுகிறது. எத்திட்டங்களுக்கு நிதி செலவிடப்படவேண்டுமென்பது அவர்களுடைய தீர்மானத்திற்கே விடப்படுகிறது.

மிஸியோ அளிக்கும் நிதியுதவியிற் பெரும்பகுதி தமது பொருளை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்ளவிரும்பும் சாதாரண மக்களின் நன்கொடையாகும்.

## மிகப் பெரிய...

(2ஆம் பக்கத்தொடர்ச்சி)

களை எடுத்துக் கொண்டு, ''ஏ பிச்சைக் காரா! இதை வாங்கிக் கொள்'' என்று நீ சொல்லாதே, மாறக, அவனுக்கு கொடுப்பதனல் உனக்கு நீயே உதவி புரிந்து கொள்ள முடிந்ததை நினைத்து, அந்த ஏழை அங்கு இருந்ததற்காக அவனிடம் நீ நன்றியுள்ளவனக இரு. கொடுப்பவன்தான் பாக்கியசாலியே தவிர, பெறுபவன் அல்ல. இந்த உலகில் உன்னுடைய தர்ம சிந்தனையும், இரக்க மனப்பான்மையையும் பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்திருப்பதற்காக நீ நன்றியுள்ளவனக இரு. இதன் மூலம் தூய்மையும், பரிபூரணத் தன்மையும் உன்னை வந்தடையும்.

சமநிலையிலிருந்து பிறழாதவன், சாந்தமானவன், நன்மையை ஆராய்ந்து ஏற்பவன், அமைதி படைத்தவன், இரக்கமும் அன்பும் பெரிதும் உள்ளவன், நல்ல பணிகளில் ஈடுபடுகிறன். அதன் மூலம் அவன் தனக்கு நன்மையைத் தேடிக் கொள்கிறன்.

சுவாமி விவேகானந்தர்

தகவல்: வ. அ. இம்மானுவேல்

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறர் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org